பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 21 சனிக்கிழமை (05.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :99

### இராணுவ டிராக்டர் மோதி வேம்படி மாணவி மரணம்

# விபத்தை அடுத்துக் கலவரம்!

## படையினர் மீது மாணவர்கள் பாய்ச்சல் காவலரண்கள் எரிப்பு, கண்டபடி சூடு

யாழ்ப்பாணம்,மார்ச்5

யாழ்.நகரப்பகுதியில் நேற்றுக்காலை இராணுவத்தினர் பயணம் செய்த டிராக்டர் ஒன்று பாடசாலைச் சிறுமியை மோதித் தள்ளி உருட்டி, சிறுமிக்கு மேலால் ஓடியதால் அந்தச் சிறுமி உயிரிழந்தாள், இந்தச் சம்பவத்தால் கொதித்தெழுந்த மாணவர்கள் இராணுவத்தினருக்கு எதிராக வன்முறையில் இறங்கினர். பதிலுக்கு இராணுவம் சுட்டதில் ஒருவர் உயிரிழந்தார் மற்றும் இருவர் காயமடைந்தனர்.

ஆத்திரமடைந்த மாணவர்களால், இராணுவ காவலரண்கள் அடித்து நொறுக்கப்பட்டு தீ வைக்கப்பட்டன. விமானப் படையினரின் வாகனம் ஒன்று பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டது. ஆங்காங்கே பொதுமக்களும் மாணவர்களும் கலவரங்களில் ஈடுபட்டனர். அவர்களைக் கட்டுப்படுத்த பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்.



விபத்தில் பலியான மாணவி

இதனால் யாழ்.நகரம் நேற்றுப் பகல் முழுவதும் பெரும் கலவர பூமியாகக் காணப்பட்டது. கடைகள் பூட்டப்பட்டன; போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்தன; மக்கள் பாதுகாப்புத் தேடி சிதறி ஓடினர்.

நேற்றுக் காலை பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த சிறுமி ஒருத்தியை இராணுவத்தினரின் டிராக்டர் ஒன்று மோதிக்கொன்றதை அடுத்தே இந்தக் கலவரம் ஏற்பட்டது.

யாழ்.வைத்தியசாலை வீதியால் சென்று கொண்டிருந்த இராணுவ டிராக்டர் ஒன்று, வீதியில் சென்று கொண்டிருந்த சிறுமியை மோதியது என்று கூறப்பட்டது.

டிராக்டரின் சக்கரம் தலையில் ஏறியதால் படுகாயமடைந்த சிறுமி உடன் யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. எனினும் மிக ஆபத்தான கட்டத்தில் அவர் இருந்ததால், அவரை விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டுசெல்ல இராணுவத்தரப்பில் ஏற்பாடு செய்யப்பட்டது.

சிறுமியை இராணுவ அம்புலன்ஸில் பலாலி

(14ஆம் பக்கம் பார்க்க)

## கைதுசெய்யப்பட்ட எண்மருக்கும் பிணை

யாழ்பாணம்,மார்ச்5

நேற்றைய சம்பவங்களின்போது ஆங்காங்கே பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட 8 பேர் நேற்றிரவு யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களைப் பொலீஸ் பிணையில் விடுவித்த நீதிவான், இம்மாதம் 15ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் பணித்தார்.

தமிழ்க்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், மா.க.ஈழவேந்தன் ஆகியோர் நேற்றுமாலை இவர்களை விடுவிப்பது தொடர்பாகப் பொலீஸாருடன் பேச்சில் ஈடுபட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.(த-12)

## அமைச்சரவையில் மாற்றம் செய்வதற்கு ஜனாதிபதி தீர்மானம்

கொழும்பு,மார்ச்5

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சரவையில் மாற்றங்களைச் செய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தீர்மானித்திருக்கிறார் என ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன. இது குறித்துத் தனது நெருங்கிய ஆலோசகர்களுடன் ஆராய்ந்திருக்கும் ஜனாதிபதி, ஜே.வி.பியினர் வகிக்கும் அமைச்சுக்கள் தவிர்ந்த ஏனைய

(14ஆம் பக்கம் பார்க்க)

### நேற்றைய கலவரத்தின்போது இராணுவம் துப்பாக்கிச் சூடு

# பல்கலைக்கழகம் முன்பாக வயோதிபர் பலி! கொட்டடியில் இருவர் வேட்டினால் காயம்!!

யாழ்ப்பாணம்.மார்ச்5

வேம்படி மகளிர் கல்லூரி மாணவி உயிரிழந்த விபத்துச் சம்பவத்தை அடுத்து நேற்று ஏற்பட்ட கலவரத்தில் வயோதிபர் ஒருவர் இராணுவச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்; வேறு இருவர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

விபத்தில் மாணவி உயிரிழந்ததால் ஆத்திரமடைந்து வகுப்புக்களைப் பகிஷ்கரித்த மாணவர்கள் வீதிகளில் இறங்கிப் பொதுமக்களோடு இணைந்து இராணுவ வாகனங்களையும், காவலரண்களையும் தாக்கினர்.

வேம்படிச் சந்தியில் இராணுவ ஜீப் வழிமறித்து எரிக்கப்பட்டதால் அந்தப் பகுதியில் பெரும் கலவரம் ஏற்பட்டது. அந்தப் பகுதியூடான சகல போக்குவரத்துகளும் தடைப்பட்டன. மாலை 4 மணிவரை இந்த நிலை நீடித்தது.



ஆலடிச் சந்தியில் இருந்த காவலரண் தாக்கிக் கொளுத்தப்பட்டதை அடுத்து அங்கி ருந்த படையினரும் பொலீஸாரும் பெட்டி படுக்கைகளுடன் வெளியேறிய காட்சி. (படம் : பிரபா)

(மேலும் படங்கள் 2ஆம் 3ஆம் பக்கங்களில்)

வேம்படிச் சந்தியில் ஜீப் தீக்கிரையாக்கப் பட்டபோது அங்கு வந்து குவிந்த கலகம் அடக்கும் பொலீஸார் மீது கற்களும் வெற்றுச் சோடாப் போத்தல்களும் வீசப்பட்டன. பொலீஸார் மாண வர்களை நோக்கி கண்ணீர்ப் புகைக் குண்டுகளை ஏவினர்.

பலாலி வீதியில் ஆலடிச் சந்தியில் அமைந்துள்ள பொலீஸ், இராணுவக் கூட்டு காவல் நிலையத்தை மாணவர் குழு ஒன்று தாக்கியது. சென்றிகள் தாக்கித் தீக்கிரையாக்கப்பட்டன. அங்கு கடமையில் இருந்த பொலீஸாரும், படையினரும் உடனடியாகத் திருப்பித் தாக்கவில்லை. அவர்கள் அங்கிருந்த தங்கள் பெட்டி படுக்கைகளைத் தூக்கிக்கொண்டு பின்வாங்கிப் பாதுகாப்பாக அருகில் உள்ள முகாம் ஒன்றுக்குச் சென்றனர்.

சுமார் அரை மணிநேரம் கழித்து ஆலடிச்



படையினரின் வேட்டுக்குப் பலியான வயோதிபர்.

சந்திப் பகுதிக்கு பவள் வாகனங்களுடன் வந்து குவிந்த பொலீஸாரும் படையினரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோரைத் தாக்கித் துரத்தத் தொடங்கினர். இதனால் பரமேஸ்வராச் சந்தி உட்பட பல்கலைக்கழகப் பிரதேசம் பெரும் அமளி துமளிப்பட்டது. கடைகள் இழுத்து மூடப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சு.கட்சி அலுவலகமும் சேதம் ஜனாதிபதியின் படம் தீக்கிரை!

நேற்றைய கலவரத்தின்போது யாழ். வேம்படி வீதியில் அமைந்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகமும் தாக்கிச் சேதப் படுத்தப்பட்டது. அங்கு வைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி குமாரதுங்கவின் பெரிய அளவிலான உருவப்படமும் தீக்கிரையாக்கப்பட்டது.

வேம்படிச் சந்தியில் மாணவர்கள் மற்றும் பொதுமக்களால் வழிமறிக்கப்பட்ட இராணுவ ஜீப் வண்டி ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது. அவ்வேளையிலேயே அருகில் அமைந்திருந்த கட்சி அலுவலகமும் தாக்கப்பட்டது.

அலுவலகத்தில் காணப்பட்ட தளபாடங்கள் அடித்துநொறுக்கப்பட்டன. கட்சிப் பெயர்ப்பலகை அடித்து நொறுக்கி அகற்றப்பட்டு வீதியில் வீசப்பட்டது. ஜனாதிபதியின் படமும் தாக்கப்பட்டுத் தீக்கிரையானது. (ஐ-3-7-12-15-17-86-190)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடிமனைகளுக்கு மத்தியில் இராணுவப் பிரசன்னம் இருப்பதை தமிழ்மக்கள் அடியோடு வெறுக்கின்றனர்

## நேற்றைய சம்பவங்கள் குறித்து பத்மினி எம்.பி.

யாழ்ப்பாணம்,மார்ச்5

பொதுமக்களின் வாழ்விடங்களுக்கு மத்தியில் - குடிமனைகளுக்குச் சமீபமாக இராணுவத்தினரின் பிரசன்னம் இருப்பதை மக்கள் அடியோடு வெறுக்கின்றனர்.

இதனை உணர்ந்துகொண்டு படையினர் இங்கிருந்து வெளியேறவேண்டும்.

இப்படித் தெரிவித்திருக்கிறார் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன்.

நேற்று இராணுவத்தினரின் டிராக்டர் மோதி வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஒருவர் உயிரிழந்ததையடுத்து பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற படையினருக்கு எதிரான கலவரங்கள் - போராட்டங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவித்ததாவது:-

தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவர் ஸ்ரீலங்கா படையினரின் வாகனத்தால் மோதிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது தமிழ் இளைஞர்களையும் - தமிழ் மக்களையும் ஆத்திரமடையச் செய்திருக்கின்றது. தமது உறவு அநியாயமாகப் பலியாக்கப்பட்ட சம்பவத்தால் அவர்கள் கோபமடைந்தமை நியாயமானது - வழமையானது.

ஆனால், இந்த நிலையில் இளைஞர்களினதும் - பொது மக்களினதும் கோபாவேசத்தை மேலும் அதிகரிக்கின்ற வகையில் இராணுவத்தினர் துப்பாக்கிகளுடனும் குண்டாந்தடிகளுடனும் - முகங்களை மூடிக்கட்டிக்கொண்டு ஓடித் திரிந்தமையும் - பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு, தடியடி என்பவற்றை மேற்கொண்டமையும் மிகவும் கண்டிக்கப்படவேண்டியதாகும்.

தமது வாழ்விடங்களுக்கு மத்தியல் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் பிரசன்னம் இருப்பதை தமிழ்மக்கள் விரும்பவில்லை - அடியோடு வெறுக்கின்றனர்.

படையினருக்கு எதிரான மக்களின் போராட்டங்களும் எழுச்சிகளும் இதனையே காட்டுகின்றன. - என்றார் பத்மினி எம்.பி. (த)

# குவேனியை சுட்ட சம்பவம்: அடையாள அணிவகுப்பு 16ஆம் திகதி நடக்கும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு.-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் குவேனி உட்பட போராளிகள் மூவர் சுடப்பட்ட சம்பவம் தொடர்பான நீதிமன்ற அடையாள அணிவகுப்பு எதிர்வரும் மார்ச் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது. இக்கொலை முயற்சி தொடர்பாக அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்ட சி.விஜயகாந்தன்(பிரதீபன்) என்ற சந்தேகநபரை எதிர்வரும்16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (து-க)

# மீண்டும் ஒரு முறை யாழ். மண்ணில் ஆக்கிரமிப்புப் படைகள் அராஜகம்

## தமிழீழ மாணவர் பேரவை கண்டனம்

யாழ்ப்பாணம்,மார்ச்,5

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் யாழ். மண்ணில் மீண்டும் ஒரு தடவை தமது அராஜகப் போக்கை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

நேற்றைய சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை விடுத்திருக்கின்ற கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்கா இராணுவத்தின் திட்டமிட்ட பலியெடுப்பில் பாடசாலை மாணவி இராணுவ வாகனத்தால் மோதிக் கொல்லப்பட்டார் ஸ்ரீலங்கா இராணுவத்தின் இக்கொடூரத்தைப் பொறுக்கமுடியாத மக்களும் மாணவர்களும் இராணுவத்திற்கு எதிரான பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதற்கு முகங்கொடுக்க முடியாத இராணுவமும் பொலீஸாரும் உயர் கல்வி நிறுவனங்களிற்கு தனது சேவையினை வழங்கிவரும் எமது நிறுவனமான சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அலுவலகத்திற்குள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அவர்களின் அலுவலகத்திற்குள்ளும் அத்துமீறி நுழைந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் எமது அலுவலகப் பணியாளர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் எமது பணியாளர்கள் மயிரிழையில் உயிர்தப்பினர்.

அத்துடன் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த 20இற்கும் மேற்பட்ட துவிச்சக்கரவண்டிகள், 10 உந்துருளிகளை அடித்துச் சேதப்படுத்தியதுடன் அவற்றில் சிலவற்றை எடுத்தும் சென்றனர்.

இவ்வாறான ஸ்ரீலங்கா இராணுவத்தினரதும் பொலீஸாரதும் அத்துமீறிய செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதுடன் ஸ்ரீலங்கா இராணுவத்தின் திட்மிட்ட நடவடிக்கையால் பாடசாலை மாணவியும் வயோதிபரும் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு எமது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



அடித்துநொறுக்கப்பட்ட நிலையில் ஸ்ரீல.சு.கட்சி அலுவலகம்.

# மனோகராச் சந்தியில் வைத்து இளைஞர்கள் தாக்கப்பட்டனர்

## பவள் வாகனத்தில் வந்த படையினரால்

யாழ்ப்பாணம்,மார்ச்5

நேற்றைய களேபரத்தைத் தொடர்ந்து நகரின் சில இடங்களில் இளைஞர்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

நேற்று மாலை 5.30 மணியளவில் யாழ். மனோகராத் தியேட்டர் சந்தியில் வைத்து இளைஞர்கள் சிலர் படையினரால் தாக்கப்பட்டனர்.

பவள் வாகனத்தில் வந்த படையினர் கொட்டன்கள் மூலம் இளைஞர்களைத் தாக்கினர்.

அச்சமயம் தியேட்டர் ஒன்றில் சினிமாப் படம் பார்த்துவிட்டுத் திரும்பியோரும் தாக்குதலுக்கு உள்ளாகினர். இச்சம்பவத்தில் காயமடைந்த அன்னலிங்கம் ரஜிகரன்(வயது 26) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் இராணுவத்தினர் துப்பாக்கிகள் ஏந்தி தயார் நிலையில் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதனால், வீதிகளில் நடமாடுவதற்கு அஞ்சி பொதுமக்கள் வீடுகளுக்குள் ஒதுங்கிக் கொண்டனர். இதனால் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. (ஐ-12-7-ரி-15-190)

# மாணவர் பேரவை அலுவலகத்தினுள் சைக்கிள்கள் நொறுக்கப்பட்டன

## படையினர் அத்துமீறல் எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்5

நேற்று இடம்பெற்ற களேபரத்தின்போது பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் படையினரால் தாக்கப்பட்டிருக்கின்றது. அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள்களும் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்து பேரவை அலுவலகத்தையும் சேதமாக்கினர் என்று தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

இதுதொடர்பாக தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

காலையில் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவியின் மீது இராணுவ வாகனம் மோதியது. இவ்வாறான இராணுவ வாகன விபத்துக்கள் தொடர்ச்சியாக குடாநாட்டில் இராணுவத்தினரால் திட்டமிட்டமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருவது எல்லோரும் அறிந்ததே.

இதனால் ஆத்திரம் கொண்ட மக்கள், மாணவர்கள் கொதிப்படைந்து இராணுவ வாகனங்களையும் இராணுவக் காவலரண்களையும் தாக்கியழித்தனர். இவ்வாறான இராணுவத்தினரின் படுகொலைகள் தொடருமானால் ஆயுதமின்றியே இராணுவத்தினரை இங்கிருந்து மக்களே வெளியேற்றுவதை யாராலும் தடுக்கமுடியாது.

கொதிப்படைந்த மக்களின் தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாத இராணுவத்தினரும் பொலீஸாரும் குடாநாட்டுக் கல்விச் சமூகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கெடுக்கும் நிறுவனமான 'சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை' அலுவலகத்தினுள் புகுந்து அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாணவர்களின் துவிச்சக்கரவண்டிகள், உந்துருளிகள் போன்றவற்றை அடித்து நாசமாக்கியதுடன் மாணவர் பேரவை அலுவலகத்தையும் அடித்துச் சேதப்படுத்தினர். அத்தோடு மாணவர் பேரவை உறுப்பினர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். எனினும் மாணவர் பேரவை உறுப்பினர்கள் தெய்வாதீனமாக காயம் எதுவுமின்றி உயிர் தப்பினர்.

மாணவர் பேரவை மீதான இத்தாக்குதல் திட்டமிட்டு இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டது இன்று கூட சுனாமியால் பாதிக்கப்பட் உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இவ்வேளையில் இவ்வாறான நிகழ்வுகளை குழப்பும் எண்ணத்துடன் வேண்டுமென்றே மாணவர் பேரவையின் மீதான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தாக்குதலினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்தோடு பல்கலைக்கழக வாயிலில் வயோதிபர் ஒருவர் சிங்களக் காடையாகளால் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கும் எமது கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்றைய விபத்தின்போது கொல்லப்பட்ட பாடசாலை மாணவிக்கும் பல்கலைக்கழகம் முன் கொல்லப்பட்ட வயோதிபருக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கோஷ்டி மோதலால் கொடிகாமத்தில் நேற்றுப் பெரும் அல்லோலகல்லோலம்!

கொடிகாமம், தென்மராட்சி செய்தியாளர்கள்

தென்மராட்சி,மார்ச்5

கொடிகாமம் நகரப் பகுதியில் நேற்று கோஷ்டி மோதலால் பெரும் களேபரம் ஏற்பட்டது. நகரப் பகுதி சிலமணிநேரம் அல்லோலகல்லோலப்பட்டது.

நகர்ப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், சந்தை ஆகியவை அவசரமாக மூடப்பட்டு மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரி நோக்கிவந்த பேருந்து மீது கல்லெறிந்து தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து நகர்ப் பகுதியில் தரித்துநின்ற அனைத்து வாகனங்களும் அங்கிருந்து வெளியேறின.

கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி, நெல்லியடி ஆகிய இடங்களிலிருந்து மேலதிகமாக பொலீஸாரை வரவழைத்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்வரை பெரும் பரபரப்புக் காணப்பட்டது.

ஒரு மணி நேரம் நகர்ப்பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது. வாகனங்கள் மீசாலை, மிருசுவில் ஆகிய இடங்களில் நிறுத்தப்பட்டிருந்தன.

நேற்றுமுன்தினம் மாலை நகர்ப்பகுதியில் இரு இளைஞர்கள் தாக்கப்பட்டு வெட்டுக் காயங்களுக்கு இலக்கானதன் எதிரொலியாக நேற்றுக் காலை இச்சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை கத்தி, கொட்டன்கள் சகிதம் கும்பலொன்று இளைஞன் ஒருவரைத் துரத்தி வந்ததாகவும், அந்த இளைஞன் நகர்ப் பகுதியில் உள்ள கடையொன்றில் தஞ்சம் புகுந்ததாகவும், அந்த இளைஞரை வெளியே விட மறுத்த கடை உரிமையாளரை கும்பல் கத்தி மற்றும் கொட்டன்களால் தாக்கிக் காயம் விளைவித்ததாகவும் இதனையடுத்து இரு பகுதியினருக்கும் மோதல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் வெட்டுக்காயங்களுக்கு இலக்கான கொடிகாமம், பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த தம்பிஜயா இராசேந்திரம் (இந்திரன் வயது 57), என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

நேற்று நண்பகல் வரை கொடிகாமம் நகர்ப் பகுதி சனநடமாட்டமின்றிக் காணப்பட்டது.

நேற்றைய மோதலின்போது கொடிகாமம் நகரில் வர்த்தக நிலையங்களின் விளம்பரப் பலகைகள் நொறுக்கப்பட்டன. கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸாரையும் கும்பல் விட்டுவைக்கவில்லை.

கொடிகாமம் பகுதியில் இருதரப்பினரிடையே உருவாகிய பகைமையே இந்தக் கோஷ்டி மோதல் தீவிரமடைவதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. அப்பகுதி பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டியின்போது இளைஞர்கள் சிலரிடையே ஏற்பட்ட சச்சரவே இந்த மோதலுக்கான ஆரம்பம் என்றும் கூறப்படுகின்றது.

கத்திகள், வாள்கள், பொல்லுகள், கம்பிகள் கொண்டு காணப்பட்ட கும்பல் ஒன்று மூர்க்கத்தனமான தாக்குதலில் ஈடுபட்டது கண்டு நகர மக்கள் பெரும் விசனமடைந்தனர்.

விடுதலைப் புலிகளின் தென்மராட்சி அரசியல்துறையினரும் பொலீஸாரும் அங்கு சுமுக நிலையை ஏற்படுத்த முயன்றனர். எனினும் நகரில் நேற்றுமாலை வரை இயல்புநிலை திரும்பவில்லை. (ஐ-74-117)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அரசின் போக்கில் மாற்றம் ஏதுமில்லை

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கடந்த வார இந்திய விஜயம் தொடர்பாக இரண்டு விடயங்களைக் கவனிக்கவேண்டும்.

முதலாவது - இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடுமாறு இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கும் பாணியில் இந்திய மண்ணில் வைத்து கதிர்காமர் வெளியிட்ட கருத்து.

அடுத்தது - கதிர்காமரின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசு நேற்றுமுன்தினம் விடுத்த தன்னிலை விளக்க அறிக்கை.

இலங்கை விவகாரத்தில் இந்தியா அதிக அக்கறை செலுத்தி அதற்கான ஒரு தீர்வைப் பகிரங்கமாக முன்வைக்கவேண்டும் - என்று அமைச்சர் கதிர்காமர் இந்தியாவில் வைத்துக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இது, விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியிருப்பது போல இந்தியாவை மேலும் சிக்கலில் மாட்டிவிடுவதற்கான இலங்கை அரசின் பொறி என்பது தெட்டத் தெளிவு.

இலங்கை விவகாரத்தில் இந்தியா எல்லை மீறித் தலையிட்டதால் பட்டுத் தெளியும் நிலைமை ஏற்பட்டது. சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் கிடைத்த பட்டறிவை இந்தியா சுலபமாக மறந்துவிடாது. "சூடு கண்ட பூனை அடுபங்கரை நாடாது" - என்று சும்மாவா சொன்னார்கள்?

தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டுவது போல இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு ஒன்றை - தமிழர்களின் நியாயமான அபிலாசைகளை நிறைவு செய்யும் சமாதானத்திட்டம் ஒன்றை - தராமல் காலத்தை இழுத்தடித்து நிலைமையைக் குழப்பவே மீண்டும் இந்தியாவை இதற்குள் இழுத்துவிடப் பார்க்கிறார் அமைச்சர் கதிர்காமர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்க வேண்டியவர்கள் சிங்களத் தலைவர்கள்தான். அந்தப் பொறுப்பிலிருந்து அவர்களை விடுவித்து, பொறுப்பை இந்தியா மீது சுமத்தவே இந்தியாவை வலிந்து இழுக்கிறார் தமிழைப் பேசுவதற்கு மட்டுமே தெரிந்த அமைச் சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

அடுத்தது - இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் சமாதானப் பேச்சை ஆரம்பிக்க அரசு இணங்காது என்ற சாரப்பட இலங்கை அரசு அளித்திருக்கும் தன்னிலை விளக்கம்.

இடைக்கால அதிகாரசபை குறித்துப் புலிகளோடு பேச அரசு தயார் என்று தகவல்த் திணைக்கள அறிக்கை மூலம் அரசு கடந்தவாரம் அறிவித்ததும், அதை அடுத்து அரசைக் கவிழ்க்கப் போவதாக ஜே.வி.பி. அச்சுத்தியதும் நாடு அறிந்த தகவல்கள்.

ஜே.வி.பி. அச்சுறுத்தலுக்கு அரசு பணிந்து விட்டது. பழைய பல்லவியைத் தவிர புதிதாகத் தான் எதையும் அறிவிக்கவில்லை என்ற சாரப்பட தன்னிலை விளக்கம் அளிக்க முன்வந்ததன் மூலம் அரசு ஜே.வி.பியை சமாளிக்க முனைந்திருக்கின்றது.

அது மட்டுமல்ல. அரசு தனது முந்திய அறிவிப்புத் தொடர்பாக தன்னைத் திருத்திக் கொள்ளாவிட்டால் அரசைக் கவிழ்ப்போம் என்ற ஜே.வி.பியின் எச்சரிக்கை குறித்து அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும், மங்கள சமரவீரவும் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு இரண்டு மணிநேரம் விளக்கமளித்த பின்னரே அரசின் தன்னிலை விளக்க அறிக்கை நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.


"நாய் வாலை நிமிர்த்த முடியாது" என்பார்கள். அதுபோல தமிழருக்கு நியாயமான தீர்வை வழங்கும் விடயத்தில் சிங்கள - பௌத்த மேலாண்மைப் போக்குடைய தென்னிலங்கை அரசின் நிலைப்பாட்டிலும் மாற்றம் வராது என்பதை இந்த அறிவிப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

"இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில், வடக்கு - கிழக்குக்காக அமைக்கப்படக்கூடிய இடைக்கால நிர்வாக ஏற்பாடு எதுவும் இறுதித் தீர்வின் பிரிக்க முடியாத பகுதியாகவே இருக்க வேண்டும்" - என்று சில காலத்துக்கு முன்னர் இந்தியா பகிரங்கமாக அறிவித்திருந்தது.

அந்த நிலைப்பாட்டையே இலங்கை அரசின் தற்போதைய தன்னிலை விளக்க அறிக்கை மீள ஒரு தடவை உறுதிப்படுத்தியிருக்கின்றது.

கடந்த வாரத்தில் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து, புதுடில்லியில் அந்நாட்டு அரசுத் தலைவர்களுடன் பரஸ்பரப் பேச்சுக்களில் ஈடுபட்ட கதிர்காமர், கொழும்பு திரும்பி ஜனாதிபதியுடன் விரிவாக ஆராய்ந்த பின்னர் இலங்கை அரசின் தன்னிலை விளக்க அறிக்கை வெளிவந்திருக்கின்றது. அதுவும் இலங்கை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை அடியொற்றி, உறுதிப்படுத்தி அந்த அறிவிப்பு வந்திருப்பதால் இந்த அறிவிப்புகளின் மூலத்தை ஊகிப்பது தமிழ் மக்களுக்கு அப்படி ஒன்றும் கஷ்டமான காரியமல்ல.

மனிதர்களுக்கு மத்தியில் மனிதநேயம் அருகிவருகின்றது. மனிதாபிமானம் செத்துக்கொண்டிருக்கின்றது. ஆறறிவு ஜீவன்கள் தமக்குள் அடிபட்டுக் கொண்டிருக்க ஐந்து அறிவு ஜீவன்களின் உலகம் இப்படி இருக்கின்றது. இங்கே நீங்கள் காண்கின்ற காட்சி மனிதநேயம் அல்ல மிருகநேயம். வீதியில் அநாதரவாய் விடப்பட்ட ஒரு நாய்க் குட்டியைப் பக்குவமாய் தத்தெடுத்து வளர்க்கின்றது ஒரு குரங்கு. நாய்க் குட்டியை மடியில் வைத்து உணவு கொடுத்து தாலாட்டிச் சீராட்டி குரங்கு செய்யும் செயல்கள் ஆறறிவு ஜீவன்களை ஆச்சரியப்படவைக்கின்றன. பருத்தித்துறை ஓராங்கட்டைப் பகுதியில் இந்த 'மனித நேயக் காட்சியை' தினமும் காணமுடிகின்றது. (படம்: சி.சுந்தரலிங்கம்)



# சித்தன்கேணிச் சந்தியில் வேகத் தடை வேண்டும்

வலி.மேற்கு.மார்ச் 5

சித்தன்கேணிச் சந்தியில் வேகத்தடை அமைக்குமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சித்தன்கேணிச் சந்தியில் வேகத்தடைக் குறிகாட்டிகள் இல்லாமையினால் அடிக்கடி வாகன விபத்துக்கள் இடம்பெறுகின்றன. கடந்தவாரம் ஒரே தினத்தில் ஒரு மணித்தியாலத்துக்கிடையில் இரண்டு வாகன விபத்துக்கள் இடம்பெற்றன. ஒரு வாகன விபத்தில் அந்த இடத்திலேயே இளைஞர் ஒருவர் பலியானார். ஆதலால், சித்தன்கேணிச் சந்தியிலுள்ள நான்கு பிரதான வீதிக்கும் வேகத் தடையும் வேகம் குறைப்பதற்கான குறிகாட்டிகளையும் உடனடியாக அமைப்பதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஜ-175)

## வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோரின் அவலம் நீடிப்பு:

# பருத்தித்துறை - கீரிமலை வீதியின் இருபுறமும் தம்மைக் குடியமர்த்தக் கோருகின்றனர் மீனவர்கள்

வடமராட்சி.மார்ச் 5

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பிரதேசத்தில் வசித்துவரும் மீனவர்கள் தம்மைத் தொண்டைமானாறு காற்றாடி (அக்கரை) தொடக்கம் வளலாய் வரையிலான கீரிமலை வீதியின் இருமருங்கும் குடியமர்த்த வேண்டும் என்று கோரியிருக்கின்றனர்.

இல்லையேல் இரு வாரங்களுக்குள் போராட்டத்தில் குதிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வலி. வடக்கு மீனவர்கள் கூட்டுறவுச் சமாசத் தலைவர் பயஸ் லோகதாஸ், செயலாளர் ந.ரட்ணராஜா ஆகியோர் நேற்றுமுன்தினம் இரவு நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்தனர்.

இம் மாநாட்டில் அவர்கள் மேலும் கூறியதாவது:-

இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமான 1990 ஆம் ஆண்டு எமது பிரதேசத்தை விட்டு இடம்பெயர்ந்த ஆயிரத்து 700 குடும்பங்கள் வடமராட்சியில் குடத்தனை, எரிஞ்ச அம்மன் கோயிலடி, சக்கோட்டை போன்ற இடங்களில் தங்கியிருந்து தொழில்களை மேற்கொண்டோம். வடமராட்சி மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருந்தவேளை, நாமும் தொழில்களை மேற்கொண்டு வந்தபோது அவர்களுக்கு மேலும் நெருக்கடிகள் ஏற்பட்டன.

தற்போதைய மக்கள் அதிகரிப்பு, சுனாமி நெருக்கடி இவற்றுக்கு மத்தியில் வடமராட்சி மீனவர்கள்கூட தொழில் செய்வதிலும், மீள் குடியேற்றத்திலும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். இந்த நிலையில் வலி.வடக்கு மீனவர்கள் இப்பிரதேசத்தில் தொடர்ந்து இருக்கவோ, தொழில் செய்யவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயம் எனக் கூறி எங்களை வலி.வடக்கு கரையோரப் பிரதேசங்களில் குடியமர்த்த முடியாது எனத் தெரிவித்துள்ளவேளையில் சந்நிதி கோயிலின் தெற்குப்புறம், கற்கோவளம் புனிதநகர், கதிரிப்பாய் ஆகிய இடங்களில் குடியமருமாறு யாழ். அரச அதிபர் திட்டத்தை முன்வைத்துள்ளார். சந்நிதியிலும், கதிரிப்பாயிலும் குடியேறினால் எங்களுக்கு தொழில் வாய்ப்பு எங்கே? புனிதநகரில் குடியேறினால் ஆழ்கடல் தொழில் செய்ய வேண்டும். அது எமக்கு பரிட்சயமில்லை. இதனால், இத்திட்டத்தை எமது மீனவர்கள் முற்றாக நிராகரித்துவிட்டார்கள்.

15 ஆண்டுகளாக இடம்பெயர் வாழ்க்கையை மேற்கொண்டு சீரான தொழில் வசதிகளின்றி அல்லல்பட்டுவரும் நாம், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலமாவது மீள்குடியமரலாம் என நம்பியிருந்தோம். அந்த நம்பிக்கை வீணாகிவிட்டது. சுனாமிக்குப் பின்னராவது மீள்குடியேறுவோம் என்று எண்ணியிருந்தோம். அதுவும் சாத்தியப்படவில்லை. இப்படிப்பட்ட நிலையில் எமது பிரதேசத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய தொண்டமானாறு காற்றாடி (அக்கரை) தொடக்கம் வளலாய் வரையான பருத்தித்துறை - கீரிமலை வீதியின் இருமருங்கிலும் எம் மக்களை குடியமர்த்துவதுடன், அதே பகுதிகளில் நெருக்குவாரமின்றி நாம் தொழில்களை மேற்கொள்ளமுடியும்.

எனவே, இப்பிரதேசத்தில் எம்மை குடியமர்த்த அனுமதிக்கவேண்டும். இல்லையேல் இருவாரங்களுக்கிடையில், வழமையான மறியல், ஆர்ப்பாட்ட பேரணி போன்ற போராட்டங்களை விடுத்து வித்தியாசமான போராட்டத்தினை மேற்கொள்வோம். இதன் விளைவுகளை அரசு பெறுப்பேற்கவேண்டும்.

- இவ்வாறு மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஜ 173)

# மத்திய கல்லூரி மைதானத்துக்கு பாதுகாப்புக் கம்பி வேலிகள்

## கிரிகெட் பெரும் போருக்கு முன்னேற்பாடு

வலி.வடக்கு.மார்ச் 5

யாழ். மத்திய கல்லூரி மைதானத்திற்கு பாதுகாப்புக் கம்பி வேலிகள் போட்டு பலப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மாத நடுப்பகுதியில் வடக்கின் பெரும் போர் கிரிக்கெட் ஆட்டம் இடம்பெற உள்ளதையிட்டே இந்த நடவடிக்கை மும்முரமாக மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த ஆண்டில் மைதானத்தில் இடம்பெற்ற சில வேண்டத்தகாத நிகழ்வுகள் எதிர்காலங்களில் இடம்பெறக்கூடாது என்பதில் ஏற்பாட்டாளர்கள் மிகவும் அவதானமாக இருக்கின்றனர் என்றும் -

இதனாலேயே இந்த முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்பட்டது. (கு-86)

# மூன்று லட்சம் ரூபா பெறுமதியான திருட்டுப் பொருள்களுடன் மூவர் கைது

யாழ்ப்பாணம்.மார்ச் 5

குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் திருடப்பட்டவை எனக் கூறப்படும் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களுடன், நல்லூர்ப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்த மூவர் யாழ். பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்த இவர்கள் மூவரையும் கைதுசெய்த யாழ். பொலீஸார், பொருள்களையும் கைப்பற்றி யாழ். பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். கஸ்டிச்சந்தியில் உள்ள எஸ்.எம்.எஸ். வோஸ்ட், காங்கேசன்துறை வீதியில் உள்ள தொலைத்தொடர்பு நிலையம், செம்மணி வீதியில் உள்ள பலசரக்கு வியாபார நிலையம், ஆரியகுளம் சந்திப் பகுதியில் உள்ள இலத்திரனியல் கடை, நல்லூர் கோயில் முன்பாகவுள்ள புடைவை விற்பனை நிலையம், மக்கள் வங்கியின் பல்கலைக்கழகக் கிளை ஆகியவற்றில் அண்மையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பொலீஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட பொருள்களின் விவரம் வருமாறு:-

ஓடியோ சி.டி.செற், வீடியோ சி.டி.பிளேயர், கணனி, ஒலிபெருக்கிப் பெட்டிகள், பெரிய வீடியோக் கமெரா, சிறிய வீடியோக் கமெரா, சவர்க்கார வகைகள், கன்டோஸ், பிஸ்கட் பெட்டிகள், பால்மா வகைகள், புடைவைகள், கையடக்கத் தொலைபேசி பற்றறிகள், உறைகள், ஓட்டோ ரயர்கள்.

இப்பொருள்கள் அனைத்தும் யாழ். பொலீஸ் நிலையத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. யாழ். பொலீஸ் நிலையத் குற்றத்தடுப்புப் பொலீஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி விதானகே தலைமையிலான குழுவினரே இப்பொருள்களை மீட்டனர். (ஜ-127)

## நாளை

*மாசி 22*
*ஞாயிற்றுக்கிழமை*
*06.03.2005*
*திதி : ஏகாதசி*
*பின்னிரவு 12.17 வரை*
*நட்சத்திரம் : பூராடம்*
*முற்பகல் 11.18 வரை*
*ஏகாதசி விரதம்*
*சுபநேரம் : 09.25-10.55*
*ராகுகாலம் : 04.55 - 06.25*
*(யாவும் பழைய நேரப்படி)*

## உதயவாக்கு

சந்தர்ப்பம் வரும்வரை காத்திருக்காமல் சந்தர்ப்பத்தை நாமே உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

- பெர்னாட்ஷா

# படகுகளைத் திருத்தியமைக்க சுழிபுரத்தில் நடவடிக்கை

வலி.மேற்கு.மார்ச் 4

சுனாமியினால் சேதமடைந்த சுழிபுரம் கடற்றொழிலாளர்களின் படகுகள், பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் நிதியுதவியுடன் திருத்தப்படவுள்ளன.

சுழிபுரம் மேற்கு கடற்றொழிலாளர்களின் நூற்றுக்கு மேற்பட்ட படகுகள் சுனாமி கடற்கோள் அனர்த்தத்தினால் சேதமடைந்தன. இதனைத் திருத்திக் கொடுப்பதற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் முயற்சி எடுத்தார். பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினர் படகுகளைத் திருத்திக் கொடுப்பதற்கு முன் வந்துள்ளனர். சேதமடைந்த படகுகளின் விவரங்களைத் திரட்டித்தருமாறு பிரதேசசெயலர் வட்டுக்கோட்டை மீன்பிடிப்பரிசோதகருக்கு அறிவித்துள்ளார். (ஜ-175)

# நேற்றைய கொந்தளிப்பின் போது....




பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்ட படையினரின் ஜீப்...




ஆலடிச் சந்தியில் 'சென்ரி' எரிகின்றது...



படையினரோடு மாணவர்கள் வாக்குவாதம்...



வகுப்புக்களைப் பகிஷ்கரித்த மாணவிகள்...



வேம்படிச் சந்தியில் முறுகல் நிலை...



சமரசம் ஏற்படுத்த கண்காணிப்புக்குழு முயற்சி...



பல்கலைக்கழகப்பகுதியில் உயிரிழந்த வயோதிபர்...



கல்லெறிக்குப் பின்வாங்கும் பொலிஸார்...



காவலரணைவிட்டு வெளியேறும் படையினர்...



படையினர் நோக்கி கல்வீச்சு...



கலட்டியில் ஆமி அப்பக்கடையை அடித்து நொறுக்கும் இளைஞர்கள்...






ஹர்த்தால் போன்று வெறிச்சோடிய நகரம்...



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 50ஆவது அகவையை ஒட்டி, கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தல் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தைச் சம்பிரதாய பூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. முன்னாள் கல்விப் பணிப்பாளரும், ஜீ.ரீ.இசற் நிறுவன கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளருமான கே.கந்தசாமி மங்கள விளக்கேற்றுவதையும் - கல்விக் கழகத் தலைவர் வே.இளங்குமரன் தேசியக் கொடியேற்றுவதையும் நிதித்துறைப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி கட்டடத்தை அதிபரிடம் கையளிப்பதையும் கட்டடத்தின் பெயர்ப்பலகையை கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குருகுலராஜா திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம். (3)

# மீண்டும் ஒரு போரை தமிழர் மீது திணிக்க முயல்கிறது இராணுவம்!

## திருமலைத் தமிழ்மக்கள் பேரவை குற்றச்சாட்டு

திருகோணமலை,மார்ச்5

தாக்குதல் சம்பவங்கள் மூலம் தமிழ் மக்களைச் சீண்டி மீண்டும் ஒரு யுத்தத்தைத் திணிபதற்கு ஸ்ரீலங்கா இராணுவம் முயற்சி செய்கிறது. இந்த முயற்சியானது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

மட்டக்களப்பு மாவட்டத்தல் பெண் போராளிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாகத் திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில் இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அண்மையில் வெலிகந்தைப் பிரதேசத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுபபாளராக இருந்த லெப்.கேணல் கௌசலயன் உட்பட ஐந்து போராளிகளும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அவர்களும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் கபடத்தனமான தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து முடிவதற்குள் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் வைத்துத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த பெண் போராளிகள் மூவர் மீது கொலை முயற்சியினை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இச் செயலைச் செய்தவர்கள் தாங்களல்ல என்றும் தமிழ் ஆயுதக்குழுக்கள் எனவும், குறிபாகத் தமிழீழ விடுதலைப் புலிகளிலிருந்து தூக்கி எறியப்பட்ட கருணாவின் குழு எனவும் இராணுவத் தரப்புக் கூறுகின்றது.

- இவ்வாறு ஆயுதக்குழுக்கள் மீது பழியைப் போட்டு ஸ்ரீலங்கா அரசு தப்பித்துக் கொள்ள முயலுவதானது தங்களைத் தாங்களே ஏமாற்றுகின்ற செயலாக முடியுமென எச்சரிக்கின்றோம்.

கருணாவின் குழு உட்பட ஏனைய ஆயுதக் குழுக்களை உள்வாங்கி வைத்திருப்பதன் மூலம் அவர்களும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் படையணியாகவே கருதப்படுவார்கள். இவ்வாறான தாக்குதல்களின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தலாம் என்று ஸ்ரீலங்கா இராணுவம் நினைக்குமாயின் அது ஸ்ரீலங்கா அரசைத் தூக்கில் போடுகின்ற முயற்சியாகவே அமையும்.

மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டால் இந்த ஆயுதக்குழுக்களை வைத்துக்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மிகப்பெரிய வெற்றியை ஈட்டலாமென்று கனவு காணவேண்டாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் போல் இனியும் நடத்தப்படுமாயின் சமாதானப் பேச்சு கேள்விக் குறியாகி, சமாதானப் பாதையில் மிகப்பெரிய விரிசல் ஏற்படும். தமிழீழ விடுதலைப் புலிகள் கடடிக்காத்து வரும் உச்சக்கட்ட பொறுமையே இற்றைவரை சமாதானத்தைக் காப்பாற்றி வருகின்றது என்பதை மறக்கவேண்டாம்.

யுத்த காலத்தைவிட சமாதான காலத்தில் மிகப்பெரிய இழப்புக்களையும் தாங்கிக் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்தின் மீது வைத்திருக்கின்ற பற்றுதலை சர்வதேசமும் அறியும்.

இவ்வாறான தாக்குதல்களின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சீண்டி மீண்டுமொரு யுத்தத்தைத் தமிழ் மக்கள் மீது திணிப்பதற்குச் ஸ்ரீலங்கா இராணுவம் முயலுமாயின் அதன் விளைவு விபரீதமாகவே அமையும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராடி எமது இறுதி இலட்சியத்தை மிகக்கூடிய விரைவில் பெற்றுக்கொள்ளுவோம் என்பதை வெளிபபடுத்துகிறோம். எனவே, சமாதானம் நிலைக்க வேண்டுமென்று அரசு விரும்புமாயின் ஆயுதக்குழுக்கள் யாவற்றையும் இராணுவத்திலிருந்து வெளியேற்றுவதுடன், இவ்வாறான தாக்குதல்களுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமெனத் திருகோணமலை மாவட்ட தமிழ்பேசும் மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம். (3)

# விவசாயிகளுக்கு விசேட பயிற்சிகள்

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் விவசாயம் சார்பான பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புகள் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்டுவருகின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாயிகளையும் மற்றும் விவசாயத்தில் ஆர்வமுடையவர்களையும் இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தப்பயிற்சி வகுப்புகள் நேற்று 9.30 மணியளவில் ஆரம்பமாகின. அந்த வகுப்பில் வியாபார நோக்கில் தரமான மரக்கறிப் பயிர் நாற்றுகள் உற்பத்தி செய்தல் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதன் தொடர் வகுப்புகள் எதிர்வரும் 10ஆம, 15ஆம், 17ஆம், 29ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இந்த வகுப்புகளில் தரமான மரக்கறி வகைகளை உற்பத்தி செய்வதற்கான பயிர்ச்செய்கை முறைகள், கொள்கலன் பயிர்ச்செய்கை போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு அவைமூலம் பெறும் புதிய தொழில் நுட்பங்களைத் தமது பயிர்ச்செய்கையிலும் அறிமுகம் செய்து கூடிய பயனைப் பெறுமாறு விவசாயிகள் கேட்கப்பட்டுள்ளனர். (3-203)

# தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேசினால் 129 தொழிற்சங்கங்கள் போர்க்கொடி தூக்கும்

## அரசுக்கு ஜே.வி.பி.கடும் எச்சரிக்கை

கொழும்பு.மார்ச் 5

புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் அரசு பேச்சுக்குச் சென்றால் அதற்கு எதிராக ஜே.வி.பியின் 129 தொழிற்சங்கங்களும் போர்க்கொடி தூக்கும். இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்கிறார் அக்கட்சி அமைச்சர் லால்காந்த.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் - அகில இலங்கை ரயில்வே ஊழியர் சங்கத்தின் அலுவலகம் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது. அந்த நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அமைச்சர் லால்காந்த இப்படிக் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியதாவது:-

இந்த அரசு பதவியேற்று அடுத்த இரண்டாம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது. ஆனால், கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. வாக்குறுதிகளை நிறைவேற்றிவைக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. நாம் அவற்றை நிறைவேற்றி வைப்போம்.

இதற்கு முன்னரான இலங்கை வரலாற்றில் ஆட்சிக்கு வருபவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதாகச் சரித்திரமே இல்லை.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போகின்றோம் என்று கூறிக்கொண்டு புலிகள் விரித்துள்ள வலையில் அரசு விழமுடியாது. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை.

ஜே.வி.பி. இலங்கை முழுவதும் தனது தொழிற்சங்க நடவடிக்கைகளை விஸ்தரித்து வருகிறது. 129 தொழிற்சங்கத்துக்கு அது தலைமைவகிக்கிறது.

எமது நிலைப்பாட்டுக்கு விரோதமாக அரசு புலிகளுடன் பேச்சை ஆரம்பித்தால் எமது அனைத்துத் தொழிற்சங்கங்களும் வீதிக்கு இறங்கிப் போராடும். அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று அவர் மேலும் கூறினார். (எ-க)

# கோட்டைக்காடு கிராமத்தில் ஐ.நா. உதவியுடன் அபிவிருத்தி

வலி.மேற்கு,மார்ச்5

அராலி மேற்கு, கோட்டைக்காடு கிராமம் ஐ.நா.அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் மேற்கொண்டுள்ளார்.

அண்மையில் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினர் கோட்டைக்காடு கிராமத்திற்கு நேரடியாகச்சென்று கிராம மக்களுடன் கலந்துரையாடி, தேவை மதிப்பீடு ஒன்றைப் பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினரின் ஒத்துழைப்புடன் தயாரித்துள்ளனர்,

இக்கிராமத்தைச் சேர்ந்த 66 குடும்பங்களுக்கு வீடுகளையும், 50 குடும்பங்களுக்கு மலசல கூடங்களையும, பொதுமண்டபம் ஒன்றையும் 12 குடி தண்ணீர்க் கிணறுகளைத் திருத்தியமைப்பதற்கும், 3 கிலோமீற்றர் நீளமான முத்தமிழ் - புங்கன் குழி வீதியை அமைப்பதற்கும் ஐ.நா நிறுவனத்தினர் திட்டமிட்டுள்ளனர். (ஐ-175)

# ஆழிப்பேரலை பாதித்த மக்களுக்கு கட்டணமின்றி கடவுச்சீட்டு, அ.அட்டை

## அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம்

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கடவுச்சீட்டுகள், தேசிய அடையாள அட்டைகள் என்பவற்றைக் கட்டணமின்றி இலவசமாக வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல், ஆழிப்பேரலையால் வீடுகள் இழந்த மக்களுக்குப் புதிய வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான காணிகளைக் கொள்வனவு செய்வதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தைக் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகப் பிரகடனப் படுத்துவதற்கும், நுரைச்சோலை அனல்மின் நிலையத்திட்டத்தை இந்திய நிறுவனமொன்றிற்கு வழங்குவதற்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் மேலும் தீர்மானிக்கப்ப்ட்டுள்ளதாகத் தெரியவந்தது. (எ-க)

# பாடசாலைகளைத் திறக்கக்கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

## மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்

பட்டிருப்பு,மார்ச் 5

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி. இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளை உடனடியாக ஆரம்பிக்கக்கோரி இப்பாடசாலைகளின் மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் நேற்றுமுன்தினம் நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மண்முனை - வடக்குப் பிரதேச செயலக வளாகத்தில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதனால், பிரதேச செயலகத்தின் அன்றாடப் பணிகளும், மாநகரசபைப் பணிகளும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.

இதனைத் தொடர்ந்து அங்குசென்ற மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான த.கனகசபை, எஸ்.ஜெயானந்தமூர்த்தி, செல்வி க.தங்கேஸ்வரி ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரைச் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தனர்.

அதன் பின்னர் அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் வே.சண்முகம், மேலதிக அரச அதிபர் எஸ்.புண்ணியமூர்த்தி மற்றும் மண்முனை - வடக்குப் பிரதேச செயலாளர் சிறிசங்கர் ஆகியோருடன் கலந்துபேசினர்.

அத்தோடு, மட்டக்களப்பு மெதடிஸ்த மததிய கல்லூரியில் உள்ள அகதிகளுடனும் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

அப்போது அரச அதிபரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்கூறப்பட்டது.

பாடசாலைகளில் தங்கியுள்ள அகதிகள் இன்னும் ஒரு வாரத்துக்குள் மாற்றப்படுவர் என்றும் -

அத்தோடு, எதிர்வரும் 14ஆம் திகதி (திங்கட்கிழமை) பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியாகக் கலைந்துசென்றனர். (எ-க)

# கியூடெக் வீடமைப்புத்திட்டம் வலி. மேற்கில் இடைநிறுத்தம்

வலிகாமம் மேற்குப பிரதேச செயலர் பிரிவில் கரித்தாஸ் நிறுவனத்தினரின் நிதியுதவியுடன் 'கியூடெக்' நிறுவனம் மேற்கொண்ட வீடமைப்புத் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

அராலி, சுழிபுரம், பண்ணாகம், தொல்புரம் ஆகிய இடங்களில் வருமானம் குறைந்த வீடுகளற்ற 100 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு கரித்தாஸ் நிறுவனம் 'கியூடெக்' மூலம் நிதியுதவியை வழங்கியது. 100 வீடுகளில் 50 வீடுகள் முடிவடைந்துள்ளன. 50 வீடுகளின் கட்டட வேலைகள் பூர்த்தியடையாமல் இடைநிறுத்தப்பட்டுளன. இதனால், இந்த வீடுகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர். கியூடெக் நிறுவனத்தினர் இந்த வீடுகளை முற்றாகக் கட்டித் தருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று பாதிக்கப்பட்டவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-175)

## உடனடி வேலைவாய்ப்பு

- COMPUTER GRAPHIC DESIGNER
- TYPE SETTER
- BINDER TRAINEE

திறமை, அனுபவம் ஆகியவற்றை வெளிக்காட்டும் ஆதாரங்களுடன் இன்று 05.03.2005 சனி காலை 9.00-12.00மணி இடையே நேரில் வரவும்.

**சுந்தர் வெளியீடு**

844, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 7086.
(கோயில் வீதிச் சந்திக்கு அருகில்)

(42620)(42-14)


உ

மட்டுவில் வடக்கு

## பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயில் மகா சங்காபிஷேகமும் ஓமமும் வழிபாடும்

மாசி மாதம் 23ஆம் நாள் 07.03.2005

திங்கள் காலை 9 மணி தொடக்கம் நயினாதீவு சிவஸ்ரீ கைலாச நாதக் குருக்கள் மகன் சிவஸ்ரீ வாமதேவாக் குருக்கள் தலைமையில் அமைதி, சமாதானம், பூமாதேவிக்கு பங்குனித் திங்கள் உற்சவம் முதலியன சிறப்பாக நடைபெறும் ஓமத்துடன் கூடிய சங்காபிஷேகப் பூசைகளையும் அவர் நிகழ்த்தி வைப்பார்.

அன்பர்கள் பால், தயிர், இளநீர், பூவகை முதலியவற்றைக் கொடுத்து அம்பிகையின் வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

மட்டுவில்.
(42705)(42-14)

சி.சிவகுரு (தர்மகர்த்தா).

## திருமகனாய் வாழ்ந்தவர்க்கு.... உருகும் மன அஞ்சலியும்... ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

உளம் மகிழ 27 - 02 - 1965

மனம் நெகிழ 09 - 09 - 2004



**அமரர் வேலுப்பிள்ளை நமசிவாய சேயோன்**

(அப்பன் - ஆங்கில ஆசிரியர்)

"போன வழிதேடிப் புலம்பி அழுகின்றோம்
பொன்மகனே எம்குடும்ப ஒருமகனே எங்குற்றாய்?
ஆன விதிவழியை ஆரறிவார் ஆர்வெல்வார்?
அதுஉன் விதியென்று அகம்துதித்து அஞ்சலித்தோம்!"

எமது குலவிளக்கு வே.நமசிவாய சேயோனின் (அப்பன்) வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (05-03-2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுகளிலும் தொடரும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

முதலாம் மைல் கல்,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (சி.41263)(46-42-14)

தகவல்: ந.வேலுப்பிள்ளை,
(தந்தை, இளைப்பாறிய ஆசிரியர்).

## சமூக அபிவிருத்தி மன்றத்தின் கூட்டம்

வலி.தெற்கு,மார்ச்5

யாழ்ப்பாணம் சமூக அபிவிருத்தி மன்றத்தின் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்றக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவி திருமதி என்.ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பணியாளர் கடன் மற்றும் பல்வேறு கடன் திட்டங்கள் வழங்குவது தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது. (3-152-202)

## கோப்பாய் ஆலயத்தின் மகா சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்5

கோப்பாய், வடகோவை ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி கோயிலின் மகாசபைப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (3-202)

## அன்பு வார ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,மார்ச்5

ஸ்ரீ சத்தியசாயி சேவா அமைப்பின் ஏற்பாட்டில் அன்புவார ஒன்றுகூடல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் சத்தியசாயி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கட்டுரை, கவிதை, கதை, சித்திரப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (3-204)

## சைக்கிள் உரிமம் வழங்கும் பணி

வலி.தென்மேற்கு,மார்ச்5

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்புப் பட்டின உப அலுவலகத்தில் இவ்வருடத்திற்கான சைக்கிள் உரிமத் தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (3-135)

## வாள்வெட்டில் இருவர் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்5

கொடிகாமத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இரு இளைஞர் குழுக்களுக்கிடையிலான வாள்வெட்டுச் சம்பவத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பெரிய நாவலடி கொடிகாமத்தைச் சேர்ந்த தவராசா பிரபாத் (வயது - 19), கமலதாஸ் (வயது-20) என்ற இரு இளைஞர்களுமே தலையிலும், கைகளிலும் படுகாயமடைந்த நிலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-13)

## நீங்காத நினைவில் 3ஆம் ஆண்டு

அவனிக்கு வரவு 08 - 05 - 1940

அவனிடம் விரைவு 15 - 02 - 2002



அமரர்

**சுப்பர் அப்புத்துரை** (விதானை)

திதி: திருதியை (05.03.2005)

அன்பின் திருவுருவாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
விருட்சமாய் அன்னையும் கிளைகளாய் நாமுமிருக்க
எமை விட்டுச் சென்ற தந்தையே!
ஆண்டுகள் 3 கடந்தாலும் எம் தெய்வம்
அரனடியில் அவன் திருவடி சேவையில்
நிலைத்து நிற்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.
(42721)(42-14)

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு.

## நீங்காத நினைவலைகள்

8 ஆம் ஆண்டு முதலாம் ஆண்டு



| அமரர் | | திருமதி |
|---|---|---|
| கிருஷ்ணர் யோகவனம் | | யோகவனம் அன்னமுத்து |
| 03.01.1927 ← | மலர்வு | → 06.04.1932 |
| 10.07.1997 ← | உதிர்வு | → 15.02.2004 |

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்
வாழ்ந்த எம் தெய்வங்களே.
உங்கள்ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சந்தை வீதி,
சுதுமலை, மானிப்பாய்.

(42715)(24-14-42)






LG Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans

141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

# மக்கள் நேசித்த மாமனிதர் சந்திரநேரு

## அவர் மறைந்து ஒருமாதம் நிறைவு



"தமிழ் மக்களின் விடிவையும் தமிழீழ மண்ணின் விடுதலையையும் தனது வாழ்வின் அதியுன்னத இலட்சியமாக வைத்து, அந்த உயரிய இலட்சியத்திற்காக அயராது உழைத்த உன்னத மனிதரைத் தமிழர் தேசம் இன்று இழந்துவிட்டது" என்று அமரர் அரியநாயகம் சந்திரநேருவுக்கு 'மாமனிதர்' என்ற கௌரவத்தை வழங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார். அவரது வாழ்வின்

**ஓர் அஞ்சலிக் குறிப்பு**

இலட்சியத்தை மிகச்சுருக்கமாக மேற்சொன்ன பந்தி அழகாக எடுத்துக்கூறியுள்ளது.

ஆம், திருக்கோயில் பிரதேசம் ஈன்றெடுத்த மற்றுமொரு தவப்புதல்வன் அமரர் சந்திரநேரு அவர்கள். அவர் 06-10-1944இல் பிறந்தார். சாமானியமான குடும்பத்தில் பிறக்கவில்லை.

ஈழவிடுதலைப் போராட்ட வரலாற்றில் முத்திரை பதித்த ஈழத்து அறப்போர் முன்னணித் தலைவர் அரியநாயகத்தின் குடும்பத்தில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே ஈழப்போராட்டத்தில் சந்திரநேரு தன்னை ஈடுபடுத்தத் தவறவில்லை. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்பதற்கொப்ப அவர் சிறுவயதில் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் பங்குபற்றி 'பூஸா' தடுப்புமுகாமிலும் அடைக்கப்பட்டிருந்தார்.

பின்பு பல வருடகாலம் வெளிநாட்டிலே அஞ்ஞாதவாசம் இருந்தார். கப்பலிலே கப்டனாகக் கடமையாற்றியபோது அவருக்குப் பல்பரிமாண ஆளுமை கிடைக்கப்பெற்றது. இந்நேரத்தில் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் எதிர்நோக்கிவரும் இன்னல்களை, அடக்குமுறைகளைச் சர்வதேசத்திற்கு எடுத்துக்கூற ஓர் ஆளுமையுள்ள மனிதர் தேவைப்பட்டார்.

இறைவனின் சித்தமோ, என்னவோ கிழககு வானில் மற்றுமொரு விடிவெள்ளியாக சந்திரநேரு மீண்டும் களத்திற்கு இறங்கினார். 'சந்திரநேரு' என்ற நாமம் அம்பாறை மாவட்டத்திற்குச் சற்றுப் புதினமாக இருந்தது. எனினும், அப்புதுமையைச் சிலமாதங்களுள் பழைமையாக மாற்றியிருந்தார் அவர்.

கப்பலில் பல வருடகாலம் கழித்த அவர், நாட்டிற்குள் வந்து சில மாதங்களுள் இலங்கை நாடாளுமன்றத்தின் 12ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் (2001-12-02) 4ஆம் இலக்கத்தில் போட்டியிட்டு மாவட்டத்தில் 5ஆவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றிவாகை சூடினார். அவர் பெற்றவாக்குகள் 26,282.

இயல்பாகவே, மக்களைக் கவரும் இனிய சுபாவம் கொண்ட நேரு வெற்றிபெற்றதில் வியப்பில்லை. அவரை அஞ்சாநெஞ்சன், கப்பலோட்டிய தமிழன், மறத்தமிழன், ஈழத்து எம்.ஜி.ஆர்., நேருமாமா எனப் பல பெயர் கொண்டு அழைத்தனர் மக்கள்.

தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட சகல சந்தர்ப்பங்களில் ஓங்கிக் குரல் எழுப்பிய பெருமை சந்திரநேருவையே சாரும். ஊடகங்களில் தினம் தவறாது இடம்பிடிப்பவர் அவர். யாருக்கும் பயப்படாமல் துணிந்து உள்ளதைக கூறும் சுபாவம் படைத்தவர் அவர். அதனால், 90வீதமான தமிழ்மக்கள் அவரில் விசுவாசம் காட்டினர்; நேசித்தனர். அவரும் மக்களை வெகுவாக நேசித்தவர்.

நாடாளுமன்ற உறுப்பினராக இரண்டரை வருடங்கள் தன்னாலான பணிகளைச் செய்தார். அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கத்தினரின் ஆலோசனைகளையும் பெற்றார்.

இலங்கைப் படையினராலும், ஏனைய சக்திகளாலும் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றபோது ஓங்கிக்குரல் எழுப்பிய பெருமனிதர் அவர். எந்நேரமும் சிரித்த முகத்துடன், விளங்கும் அவர் கோபப்பட்டு ஏசுவதும் உண்டு. அது நன்மை கருதியதாக இருக்கும்.

முஸ்லிம் மக்களுடன் மிகவும் அன்னியோன்யமாகப் பழகியவர். பல முஸ்லிம்கள் இன்றும் அவரை நேசிக்கின்றனர். முஸ்லிம்களுடன் மிகவும் நெருக்கமாகப் பழகுகின்றோம் என்பதற்காகத் தமது மக்களின் உரிமைகள் மீறப்படுகின்றபோது அவற்றைச் சுட்டிக்காட்டாமலும் இல்லை.

எவருக்கும் எந்தநேரத்திலும் உதவிசெய்யும் மனோபாவம் அவரிடமிருந்தது. விடுதலைப் புலிகளுடன் நல்லுறவை வைத்திருந்தார்.

அவருக்கு வயது 60 என்றால் யாரும் நம்ப முடியாதளவிற்கு ஓடி ஆடித்திரிவார். இலகுவாக யாருடனும் பழகிக்கொள்ளும் நல்ல குணாம்சமிருந்தது. அது அவருக்கு 'பிளஸ் பொயின்ற்'.

இரண்டரை வருட நாடாளுமன்ற வாழ்வில் மக்களோடு மக்களாக நின்று தன்னாலான சேவைகளைச் செய்தார். அரசியல் சுழியினால் 13ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியுற நேரிட்டது. ஆனால், அவர் சளைக்க

**வி.ரி.சகாதேவராஜா**

வில்லை. உண்மையில் நானே வென்றவன் என அடிக்கடி கூறுவார். சொறிக்கல்முனை, பாணடிருப்பு, காரைதீவு, கோமாரி, தம்பிலுவில், பொத்துவில் எல்லாம் அடிக்கடி உச்சரிப்பார். சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த பிற்பாடு ஊரை விட்டுப் போகாமல் தொடர்ந்து மக்களோடு நின்று சேவையாற்றியவர் அவர். சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல தமிழ்ப் பிரதேசங்களுக்கும் சென்ற பிரதிநிதி அவர். மேலும் மனித உரிமை ஆர்வலராக ஜெனீவா வரை சென்று வந்திருக்கிறார். பல மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கெதிராகக் குரல் எழுப்பியவர்.

காஞ்சிரன்குடா படுகொலைச் சம்பவத்தை உலகறியச் செய்த பெருமை அவரையேசாரும். அந்தச் சம்பவத்தில் உயிர்நீத்த நாட்டுப்பற்றாளர்களை அடக்கிய இடத்திலேயே மாமனிதரின் பூதவுடலும் அடக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத் தமிழரின் தலைவிதி தொடர்நது தளம்பல் நிலையிலே சென்று கொண்டிருப்பதற்குச் சந்திரநேருவின் இழப்பும் ஓர் உதாரணம் எனலாம்.

"குரல் கொடுப்போம்" என்றவர்கள் சுனாமி வந்தும் எட்டிப்பார்க்காதவேளை தொடர்ந்து குரல்கொடுத்த ஒரேயொரு பெருந்தகை மாமனிதர் சந்திரநேரு என அடித்துக் கூறலாம்.

அம்பாறை மாவட்டத் தமிழர் சார்பாக பெருங்கனவை கண்டிருந்தார் அவர். காரைதீவை புனித பூமியாக்கத் திட்டமுள்ளது என அடிக்கடி கூறுவார். அவரது கனவை நனவாக்க அவரது புத்திரன் சந்திரகாந்தன் (றொகான்) தயாராக வேண்டும் என்பதே அம்பாறைத் தமிழர்களது எதிர்பார்ப்பாகும். பொத்துவில் பகுதியில் சொந்த செலவில் வீடமைப்புத் திட்டம் அமைக்கவும் ஏற்பாடுகள் நடைபெறுவதாக தெரிகிறது. அம்பாறைத் தமிழர்களின் தலைவிதியை மாற்றப் புத்திரன் புறப்பட வேண்டும்.

✪

---

# தமிழர் தாயகக் கூட்டுறவுத்துறையை அமைச்சு புறக்கணிக்கின்றது....!

இலங்கையில் யாழ்.மாவட்டம் கூட்டுறவுத் துறையில் முன்னுதாரணமாகச் செயற்பட்ட வரலாறு யாவரும் அறிந்த உண்மை.

இக்கூட்டுறவு அமைப்புக்கள் வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் பல்வேறு தொழிற் துறைகளை உள்ளடக்கிப் பெருவிருட்சமாக வளர்ந்து வந்த வேளையில்தான் இலங்கை இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கை தமிழ் பேசும் மக்களின் தாயக நிலப்பரப்பெங்கிலும் வேகமுடன் செயற்படலாயிற்று. அதனூடாக நிலங்கள் அபகரிக்கப்பட்டிருப்பதும் கல்வி, பொருளாதார வளர்ச்சியில் தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்பட்டும் பல்வேறு துன்ப, துயரங்கள் அநுபவித்து இந்த இடத்தையும் பொன்விளையும் பூமி எனக் குறிப்பிடும் நிலங்களையும் இழந்து அகதிகளாக நலன்புரி நிலையங்களில் அவல வாழ்வு வாழும் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் கூட்டுறவு நிறுவனங்கள் தங்களது முதலீட்டுத் தொழிற்பாடுகளையும் கிளைகளையும் தமது தலைமைப் பணிமனைகளையும் இழந்து தாம் தேடிய பொருள் இழப்புக்களையும் தவறவிட்டநிலையில் மிகவும் நொந்தநிலையிலும் தம் சார்ந்த பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு உதவிகளை உயிரினைத் துச்சமென மதித்து மக்கள் சேவையே தமது இலக்காக உழைத்த பணியாளர்கள், பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள் இம்மண்ணில் மதிக்கப்பட வேண்டியவர்கள். ஆனால், இந்நிலையிலும் பல இடர்பாடுகளின் மத்தியிலும் மக்கள் சேவையாற்றும் தாயக நிலப்பரப்பிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களின வள்ர்சசிப் போக்குபற்றி ஒரு தமிழ் கூட்டுறவு அமைச்சர் கவனமில்லாதிருப்பது கூட்டுறவாளர்களுக்குப பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுளளது.

இந்நிலையில், எமது கூட்டுறவு அமைப்புக்களை மாற்றாந்தாய் மனப்பாங்குடன் பார்க்கும் கூட்டுறவு அமைச்சின் கவனத்திற்குச் சில விடயங்களைத் தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

குறிப்பாக, இராணுவ நடவடிக்கைகளினால் கையகப்படுத்தப்பட்ட நிலப்பரப்பிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைப் பணிமனைகளையும் கிளைகளையும் சுதந்திரமாக இயங்குவதற்கு இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதைவிட, ஏனைய இராணுவ நடவடிக்கைகளால் கட்டடங்களையும் சொத்துக்களையும் இழந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களின் இழப்பீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளைப் பற்றிச் சிந்திக்கப்படவில்லை. பல கோடி ரூபா பெறுமதியான கடடடங்களையும் சொத்துக்களையும் இழந்த நிலைபற்றிய அறிக்கைகள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு வழங்கப்

**கி.சிவநேசன்**
நாடாளுமன்ற உறுப்பினர்

பட்டபோதும் இதுவரை இத்துறையில் பாராமுகமாக இருப்பது ஏன்?

மேலும் கோடிக்கணக்கான இழப்பீடுகளின் மத்தியிலும் தமது சேவைகளைச் சில கூட்டுறவுச் சங்கங்கள் தற்காலிக அலுவலகங்களில் இருந்து கொண்டே வழங்கிவருகின்றன. இதனால், 80 வீதமான கூட்டுறவுச் சங்கங்கள் பாரிய நட்டத்திற்குள்ளான நிலையிலேயே செயற்படுகின்றன. இந்நிலையில், அச்சங்கங்களின் இழப்பீட்டுத் தொகை கிடைக்கும் பட்சத்தில் சங்கங்களைத் திறம்பட செயற்படுத்துவதோடு, பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய வேதனத்தையும் வழங்க வாய்ப்புக் கிட்டும்.

இன்றும் ஓர் அரச அலுவலகச் சிற்றூழியர் பெறும் சம்பளத்தைக்கூட ஒரு கூட்டுறவுப் பொது முகாமையாளர் பெறமுடியாத அவலம் தொடர்கிறது. கூட்டுறவுப் பணியாளர்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கப்படுவதில்லையா? இதனைக் கருத்திற்கொண்டு கூட்டுறவுப் பணியாளர்களுக்கான சம்பள மீளாய்வுத் திட்டம் பற்றி ஏன் சிந்திக்கப்படவில்லை. பல கூட்டுறவுப் பணியாளர்கள் தமது பணிகளை விட்டு வேறு வேலைகளுக்குச் செல்லும்நிலை இன்று உருவாகியுள்ளது. இந்நிலையில், கூட்டுறவில் பணியாற்ற எவருமே முன்வர விரும்பாத நிலை தோன்றும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.

மேலும் விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் கிடைத்துள்ள நிலப்பரப்பினை முறையாகப் பயன்படுத்தி வருகின்றன. ஆனால், யாழ்.மாவட்ட விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்தத் தடைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, வடக்கு - கிழக்கு விவசாய உற்பத்திகளின் சந்தை வாய்ப்பு தென்னிலங்கைப் பகுதியில் உண்டு. ஆனால், விவசாயச் சந்தைப்படுத்தல் அமைச்சு இதைக் கவனத்தில் எடுத்திருக்கவேண்டும். ஆனால், இன்று நடப்பதென்ன? வடபகுதியில் மக்கள் விவசாய உற்பத்திகளை அதிகரிக்கும் வேளையில் தென்னிலங்கையில் அப்பொருள்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் வடக்கு - கிழக்கு மாகாண விவசாய உற்பத்திகளின் சந்தை வாய்ப்பு இல்லாதுபோக, தாயக நிலப்பரப்பு விவசாயிகள் மிகுந்த பாதிப்பை அடைகின்றனர். இந்நிலை பற்றிச் சிந்திக்கப்பட வேண்டும்.

வடபகுதி விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பு தென்பகுதியில் ஏற்படுத்துவதால் ஸ்ரீலங்காவிற்கான அன்னிய செலவாணி மீதப்படுத்துவதைக்கூட இவ்வமைச்சும் அதிகாரிகளும் கவனிக்காதிருப்பது ஏனோ புரியவில்லை? இந்நிலை பற்றிச் சிந்தித்து வடக்கு - கிழக்கு பகுதிகளில் விவசாய, கூட்டுறவுச் சங்கங்களின் உழைப்புக்கு ஊக்கம் கொடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, தற்போது வெங்காய உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் தென்னிலங்கையில் வெங்காயம் இறக்குமதி செய்வது பற்றி விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் விவசாயச் சந்தைப்படுத்தல், கூட்டுறவு அமைச்சு நெற்கொள்வனவிற்கான திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி, எமது தாயக நிலப்பரப்பின் கிழக்குப் பகுதியின் ப.நோ. கூட்டுறவுச் சங்கங்களிற்குப் பாரிய கடன்களை வழங்கி, நெல் கொள்வனவுக்கான நடைமுறை மேற்கொண்டுள்ள நிலையில், வடபகுதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான அவ்வாய்ப்பை வழங்குவது பற்றி எந்தவோர் அறிவுறுத்தலும் வழஙகப்படவில்லை என வடபகுதிக் கூட்டுறவாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இவ்வாறான பாகுபாடுகூடும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் கூட்டுறவு விவசாய சந்தைப்படுத்தல் அமைச்சின் நடவடிக்கைகளை மக்கள் விழிப்புடன் அவதானித்துள்ளனர். தாயக நிலப்பரப்பில் வாழும் தமிழ்பேசும் மக்களின் கூட்டுறவு நிறுவனங்களின் நலன்கள் பற்றிக் கவனியாத தமிழ் அமைச்சர் இவ்விடயங்களைக் கவனத்தில் எடுத்துச்செயற்பட வேண்டும். கூட்டுறவு அமைப்புகளையும் ஒரு மக்கள் அமைப்பு வெறுமனனே அரசின் அவசிய தேவைகளுக்கு மட்டும் அந்த அமைப்புக்களையும் அமைப்பு சார் அங்கத்தவர்கள், பணியாளர்கள், பணிப்பாளாகளையும் பயன்படுத்தியபின் அவர்களைப் பற்றிச் சிந்திக்காமல் புறந்தள்ளுவது மனிதாபிமானமற்ற செயல் என்றே கருதுகிறேன். இதை இத்துறைசார் அமைச்சரும் அமைச்சு அதிகாரிகளும் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும். தவறின் வரலாறு தொடர்ந்தும் வசை பாடும்.

❖

# சங்குவேலி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை உப அதிபர்

## உயர்திரு. ஏ.சி.சண்முகலிங்கம் அவர்களின்

# சேவைநலன் பாராட்டுவிழாச் சிறப்பு மலர்





### மாணவருக்கு உகந்த ஆசிரியர்

கலைவளமும் இறைவளமும் நிறைந்த இணுவைப்பதியில் அனைவராலும் அறியப்பட்ட ஆசிரியராக விளங்குபவர் திருவாளர் ஏ.சி.சண்முகலிங்கம் அவர்கள். நிறைந்த ஆசிரியப்பணியாற்றி ஓய்வுபெறும் இவரின் சேவையினைப் பாராட்டி விழா எடுப்பது அறிந்து பெருமகிழ்வெய்துகின்றோம். ஆசிரியர் இருளையகற்றி பிற உலகில் நேர்த்தியாக வாழவைப்பவர். திரு.சண்முகலிங்கம் அவர்கள் மாணவருக்கு உகந்த ஆசிரியராகவும் சமுதாயத்திற்குதவும் திருத்தொண்டராகவும் விளங்குபவர். பிரசித்திபெற்ற இணுவில் கந்தசுவாமி கோயில் அறங்காவலர் சபையில் முக்கிய பங்கு வகிப்பவர். இத்தகைய பெரியாரின் சேவையை வாழ்த்துவதோடு, ஆசிரியப்பணியில் ஓய்வுபெறும் இவர் பூரண ஆரோக்கியத்துடன் பல்வேறு சமய சமூகப் பணிகளில் பங்காற்றி மக்களுக்கு உதவும் மகத்தான பண்பாளராகத் திகழ இறையருளை இறைஞ்சி நல்லாசிகள் கூறி வாழ்த்தி அமைகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**



### தன்னலம் பாராத சேவையாளன்

எமது பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டு உழைத்த பண்பாளர். எமது பாடசாலையில் இவரின் 13 வருடகாலசேவையில் பாடசாலை பல்வேறுபட்ட துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வந்துள்ளது. தன்னலம்பாராது அயராது உழைத்தவர். 5 ஆம் தரப் புலமைப்பரிசில் வகுப்பிற்குப் பொறுப்பாகவிருந்து மாணவர்களின் சித்திக்காகத் தனது கவனம் அனைத்தையும் அர்ப்பணித்தவர். பயிற்சிக்கொப்பிகள், எழுது கருவிகள், கலர்சோக் என்பவற்றைத் தரம்-5 மாணவர்களுக்கு இலவசமாக வழங்கிவந்தவர். இரக்கசிந்தனையும் இறை பக்தியும் கொண்டவர். சமயமன்ற பொறுப்பாளராகவும், சமயவிழாக்களை வழிநடத்துபவராகவும் மெய்வல்லுனர் போட்டியின் செயலாளராகவும், போட்டிகள் நடத்துவதில் திறமைமிக்கவராகவும் விளங்கினார். தனது ஓய்வுக்காலத்தில் சகல சிறப்புக்களையும் பெற்று இனிதே வாழ இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அதிபர் **சு. சண்முககுலகுமாரன்**
B.A., M.Ed., Dip. in Ed., Sc.Trd., S.L.P.S.



### இனிய பண்பு மிகுந்தவர்

ஆலயங்களும், ஆசிரியப்பெருந்தகைகளும், கலைஞர் திருக்கூட்டமும் நிறைந்த திருவூர் இணுவில் கிராமம். இவ்வூரில் உதித்த ஆசிரியர் ஸ்ரீமான் ஏ.சி. சண்முகலிங்கம் அவர்களின் சேவைநலன் குறித்து விழா எடுத்துக் கௌரவிப்பது அறிந்து பேருவகை கொள்கின்றேன். கல்விப்பணி மிகவும் புனிதமானது. இப்பணியில் பல வருடங்கள் பணியாற்றிய இப்பெருந்தகை பலரது பாராட்டுக்கும் உரியவராக விளங்குகிறார். எங்கள் தேவஸ்தான விழாக்கள் அனைத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் இவர், இணுவில் கந்தசுவாமி கோயில் அறங்காவலர் சபையிலும் முக்கிய பங்கு கொண்டு உழைப்பதை யான் அறிவேன். இறைபக்தியும் இனிய பண்பும் மிக்க ஆசிரியப் பெருந்தகை தனது ஆசிரியப்பணியில் இருந்து ஓய்வுபெற்றாலும் சமூகப்பணிகளில் மிகுந்த ஆர்வத்துடன் தொடர்ந்து தொண்டாற்றவேண்டும் என அம்பாளைப் பிரார்த்தித்து அன்பர் சண்முகலிங்கம் அவர்களையும் அவர்கள் குடும்பத்தவர்களையும் வாழ்த்தி வணங்கி அமைகிறேன்.


**தங்கம்மா அப்பாக்குட்டி (J.P.).**
*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*



### பொறுப்புணர்வுள்ள ஆசான்!

யா/ சங்குவேலி அ.த.க. பாடசாலையில் கடமையாற்றிய காலத்தில் பாடசாலையின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டிருந்தார். அதிபரின் நிர்வாகத்திற்கு மிகவும் உறுதுணையாகவிருந்து இணைப்பாட செயற்பாடுகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். பாடசாலையைத் தரிசிக்கும் வேளையிலும் அதிபர், பெற்றோர், ஏனைய ஆசிரியர்களின் வாயிலாகவும் அவரின் சேவையை அறிந்துகொண்டேன். தனது கடமையைப் பொறுப்புணர்வுடன் செயலாற்றி நல்லாசிரியர் பெயரினைக் கல்வித்திணைக்களத்தின் மதிப்பீட்டிற் பெற்றமையைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவரது ஓய்வுகாலமும் பலருக்கும் பயனுற சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

**செ.குபேரநாதன்.**
*கோட்டக்கல்விப்பணிப்பாளர், உடுவில்.*



### ஈரநெஞ்சுடைய இனிய மனிதன்

அன்பும் பண்பும் எவருக்கும் உதவும் ஈரநெஞ்சுமுடைய இனியவர் அண்ணன் சண்முகலிங்கம் அவர்கள். எனது சிறுபராயம்முதல் என்னை உற்சாகப்படுத்துகின்ற ஊக்கசக்தியாக விளங்குபவர் இவர். அகவை அறுபது நிறைவுபெற்று இளைப்பாறும் இவருக்கு அன்பர்கள் விழா எடுத்துக் கௌரவிப்பது அறிந்து மிகவும் ஆனந்தமடைகின்றேன். கல்விப்பணி, ஆலயப்பணி, சமூகப்பணி அனைத்திலும் ஆர்வமாக, அமைதியாக செயற்படுபவர் இவர். பெரியவர்களை மதிக்கும் பண்பும் சிறியவர்களைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தும் பண்பும் இவரது இயற்பண்புகளாகும். தனது தாய், தந்தையரை நிறைவாக நேசித்து, அவர்களை சீராகப் பராமரித்து அவர்களது கடமைகளை நிறைவாக நிறைவேற்றிய கடமையாளன். தனது சகோதரர்கள் அனைவரும் வெளிநாட்டில் வாழுகின்ற போதிலும் அன்னை, தந்தையைப்பேணும் பணி அனைத்தையும் நிறைவேற்றுவதில் பெருவிருப்புக்கொண்டு தன்பணி தொடர்ந்தவர். இன்று இணுவில் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா சபையில் முக்கியபொறுப்பை வகித்து ஆலய வளர்ச்சிக்கு உதவி வருகின்றார். சங்குவேலி மக்கள் இவரது கல்விப் பணிக்கு என்றும் நன்றிக்கடன்பட்டவர்கள். ஏழைச்சிறார்களுக்கு உதவவேண்டும் என்ற ஆர்வத்தினால் பல மாணவர்களுக்கு வருடாவருடம் உதவுவார். இணுவிலில் அமைக்கப்பட்டுவரும் அறிவாலயப்பணியில் தனது பங்களிப்பைச் செலுத்திவரும் இவர், தொடர்ந்து தன்பணிகளை மேன்மேலும் சிறப்பாகச்செய்து நிறைவாக வாழ எங்கள் குலதெய்வங்களைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.

செஞ்சொற்செல்வர் **ஆறு.திருமுருகன்.** *உப அதிபர், ஸ்கந்தவரோதயக்கல்லூரி, சுன்னாகம்.*

### நிறைவான பணி புரிந்தவர்

இணுவில் திருவூரில் ஏரம்பு சின்னத்துரை தம்பதிகளின் இனிய புதல்வனாய்த் தோன்றி தந்தைக்கேற்ற நல்மைந்தனாய் தந்தையின் பொறுப்புக்களைத் தோள் கொடுத்துத் தாங்கி தன் குடும்பத்தை தரணிபோற்ற வாழ்வித்தவர். ஆசிரியப்பணியை தெய்வப்பணியாகப் போற்றி அகவை அறுபது வரை அரும்பணி ஆற்றியவர். இணுவைக்கந்தன் தேவஸ்தான வளர்ச்சிக்காக நிர்வாகசபையில் நீண்டகாலமாக நிறைவான பணிகள் பல ஆற்றி வருபவர். திருவிழா உபயத்தையும் சிறப்பாக நிகழ்த்தி மகிழ்பவர். கல்விப்பணி கந்தன் பணியோடு கருணை உள்ளம் கொண்ட சி.சண்முகலிங்கம் ஆசிரியர் பல்வேறு சமூகப்பணிகளையும் ஆர்வத்துடன் ஆற்றுபவர். இவரது பணிகள் மேலும் சிறப்பாக அமைய இணுவைக்கந்தன் அருளைவேண்டி எமதும் என் குடும்பத்தினரதும் மனம்நிறைந்த ஆசிகளையும் வழங்கி மகிழ்கின்றேன்.

**ந. உருத்திரமூர்த்திக்குருக்கள்,**
*இணுவில் கந்தசுவாமி கோயில் பிரதம குரு, இணுவில்.*

மலர்:
**பாடசாலைச் சமூகம்**

(C-41289)

---

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம் – இலங்கை

## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

# முக்கிய அறிவித்தல்

## வெளிவாரிப் பரீட்சைகள்

### கலை முதற் தேர்வு 2002 & 2003

மேற்படி கலைமுதற் தேர்வு - 2002&2003 பரீட்சைகளை மிகவிரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இப்பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் மீள்பரீட்சார்த்திகள் யாழ்.பல்கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 50 செலுத்திய மைக்கான பற்றுச் சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து உரிய விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தைப்பெற விரும்புவோர் *மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழகக் கிளை கணக்கிலக்கம் 90503இல் ரூபா 50* செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டை, சுய முகவரியிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான தபால் உறை ஒன்றுடன் *உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 15.03.2005ஆகும். அதன் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

முக்கிய குறிப்பு:

1. மீள் பரீட்சார்த்திகள் தாங்கள் சித்தியடைய வேண்டிய அனைத்துப் பாட அலகுகளுக்கும் விண்ணப்பித்தல் வேண்டும்.
2. மீள் பரீட்சார்த்திகள் தாங்கள் தோற்றவேண்டிய பாட அலகுகளை மாற்றி வேறு பாடங்களை மீள் பரீட்சைக்கு விண்ணப்பித்தல் கூடாது. அவ்வாறு பாட அலகை மாற்றி, பரீட்சைக்குத் தோற்றும் மீள் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் வெளியிடப்படமாட்டா.
3. ஏற்கனவே கலைமுதற் பரீட்சைக்கு மூன்று தடவைகள் தோற்றி சித்தியடையத் தவறிய மீள் பரீட்சார்த்திகள் மீண்டும் பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் பல்கலைக்கழக மூதவையின் முன் அனுமதி பெறப்படுதல் அவசியமானதாகும். இதனால் மேற்படிப் பரீட்சார்த்திகள் மீண்டும் ஒருமுறை பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முறைப்படி விண்ணப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாமல் பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் எக்காரணம் கொண்டும் வெளியிடப்படமாட்டா.

**துணைவேந்தர்.**
01-03-2005 (சி.41296)(46)

---

## அபிவிருத்தித் திணைக்கள மும்மொழிப் பயிற்சி நெறிக்கு எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மார்ச்5

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடக்கு-கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக களத்தினால், அரச உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்பட்ட மும்மொழிப் பயிற்சி நெறிக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்.வேம்படி உயர்தர மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று பிராந்திய ஆணையாளர் தெரிவித்துள்ளார். (3-202)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம

தென்மராட்சி,மார்ச்5

கைதடி குருசாமி வித்தியாலய அதிபர் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை தரம் I அல்லது தரம் IIஐச் சேர்ந்தவர்கள் அல்லது இலங்கை ஆசிரியர் சேவை தரம் I அல்லது தரம் IIஐச சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

இப்பதவிக்குரிய விண்ணப்பப்படிவங்களைத் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்து சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இவ்வித்தியாலய அதிபர் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (8-117)

## வெங்காய அறுவடை மும்முரமாக நடக்கிறது

வடமராட்சி,மார்ச்5

வடமராட்சிப் பிரதேசத்தில் பயிரிடப்பட்ட வெங்காயம் அறுவடை செய்யும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இவ்வருடம் வெங்காயச் செய்கையில் அதிக மானோர் ஈடுபட்டிருந்தனர், கூடுதலான விளைச்சல் ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.

இவ்வருட போகத்தில் இங்கு பயிரிடப்பட்ட புகையிலைகள் பெருமழையினால் அழிந்து போயின. இதனையடுத்து பெரும்பாலானோர் வெங்காயச் செய்கையை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (3-173-204)

---


புதிய பிரிவுகள் ஆரம்பம்

**External Degree**

2005, 2006 பிரிவுகளுக்கானது
(Jaffna University)

G.A.Q. | 1st in Com. | B.A. | B.Com.

ஆரம்பம்: 05.03.2005 9.30 a.m.

**aat (SriLanka)**

Stage II & StageIII
Medium: Tamil & English Exam: August
ஆரம்பம்: 05.03.2005 11.30 a.m. (Saturday)

Further Details
**Director**
***JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT.***
464, Hospital Road
(Near Commercial Bank),
Jaffna.
(C/41287)(42-11-45)


---

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னுத்துரை புஸ்பராணி



இல.39, சோமசுந்தரம் அவனியூவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை புஸ்பராணி அவர்கள் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் புஸ்பமலர், புஸ்பவதி, திலகவதி, கமலவதி, பஞ்சாட்சரம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகாலிங்கம் (பிரதேச சபை, நீர்வேலி), மைக்கல (கட்டடத் திணைக்களம்), காலஞ்சென்ற Dr.சண்முகநாதன் அருள்நேசதுரை (கொழும்பு துறைமுகம்), ஜெயமாலினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் உசாநந்தினி, மேனகா, செந்தூரன், மயூரன், மைதிலி (லண்டன்), ஜெயறீகன் (லண்டன்), மிருணா, சர்மி, புவி, அகிலன், குவேன், ஜனார்த்தனன், ரஜீவன், யுவானா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் பிரியந்தனியினது பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2005) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செலலப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*39, சோமசுந்தரம் அவனியூ,*
*யாழ்ப்பாணம்.*
*T.P. No.: 222 3858.*

தகவல்:
குடும்பத்தினர்.

(42718)(21-14-18)

# மென்மையான உணர்வோடு கிறிஸ்துவில் வாழ்வோம்!

## தவக்காலச் சிந்தனை

"உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்". எமது மனித உணர்வுகளானது மிகமிக மென்மையானதாக அமையப் பெற்றுள்ளன. இந்த மென்மையான உணர்வுகளில் அன்பு இழையோடிக்கொண்டிருக்கின்றது. அதனாலதான் நம் முன்னே நடந்தேறிக் கொண்டிருக்கின்ற பல நிகழ்வுகள் நம்மைப் பாதிக்கின்றன. நிகழ்வுகள் நம்மைப் பாதிக்கப்பாதிக்க எமது இதயம் கடினப்படுகின்றது. எமது இதயம் கடினப்படப்பட நமது செயல்களாலும், சொல்லாலும் கிறிஸ்துவில் இருந்து, கிறிஸ்தவ விழுமியங்களில் இருந்து அந்நியப்பட்டுப் போய்க்கொண்டிருக்கின்றோம். இதனால், தீயசெயல்களில் எம்மையறியாமல் உடந்தையாகி விடுகின்றோம். இதனை மாற்றி அமைப்பதற்காகவே இக்காலம் எமக்குத் தரப்பட்டுள்ளது. எனவே, இக்காலத்தில் எமது மென்மையான உணர்வினைப் பற்றிப் பிடித்து கிறிஸ்துவில் வாழ்வோமாக.

இருபத்தைந்தாம் நாள் - குணா.

# புங்குடுதீவு வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினால் புங்குடுதீவு வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் வணிகர் கழகத் தலைவர் சிவகுமாரன், நிர்வாக சபை உறுப்பினர் இ.ஜனக்குமார், யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சமாசச் செயலாளர் கா.நித்தியானந்தன் ஆகியோர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் இராசையாவிடம் மருத்துவ உபகரணங்களைக் கையளித்தனர்.

இந்நிகழ்வில், இவ்வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கத் தலைவர் சு.கருணாகரன், உபதலைவர் ஏ.ஆர்.அம்பலவாணர், நிர்வாக உறுப்பினர் கே.சிறிஸ்கந்தன், புங்குடுதீவு மகாவித்தியாலய ஆசிரியர் இ.தேவதாஸ் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (8-204)

# மரணவிசாரணை அதிகாரிகள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வலி.தெற்கு,மார்ச்5

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆறு பிரதேசங்களில் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், வலிகாமம் தெற்கு (உடுவில்), வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி), வல்வெட்டித்துறை கிழக்கு, நெடுந்தீவு, கோப்பாய் ஆகிய பிரதேசங்களுக்குத் திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிப்பதற்கென விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றம் நீதி மற்றும் நிதித துறை மறுசீரமைப்பு அமைச்சு திடீர் மரண விசாரணை அதிகாரிகளை மேற்கண்ட பிரதேசங்களில் நியமிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேற்படி பிரதேசங்களில் இரண்டு வருட காலததுக்கு மேல் வசித்துவரும் முப்பது வயது தொடக்கம் 58 வயதுக்குட்பட்ட இலங்கைப் பிரஜைகள் இதற்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பதாரிகள் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே தடவையில் நான்கு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருக்கவேண்டும். அத்துடன், தமிழ்மொழி, கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் உட்பட இரண்டு பாடங்கள் உட்பட ஒரே அமர்வில் 5 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்து இரு தடவைகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை ஏப்ரல் மாதம் 29ஆம் திகதிக்கு முன்னதாக 'நீதி மற்றும் நீதித்துறை மறுசீரமைப்பு, கொழும்பு - 12' என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (8-152)

# பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் கனடா நிபுணர்கள் சத்திரசிகிச்சை


கரவெட்டி,மார்ச்5

கனடாவில் இருந்து வருகைதந்துள்ள வைத்தியக் குழுவினர் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை ஒன்றைச் செய்துமுடித்துள்ளனர்.

சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இச்சிகிச்சையில் தென்மராட்சி சாவகச்சேரி வைத்தியசாலை, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை, பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை ஆகிவற்றில் இருந்து சத்திர சிகிச்சைக்குரியவர்கள் எனத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

இவர்கள் கடந்தவாரம் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்று அங்குள்ள சத்திரசிகிச்சைக்குரிய நோயாளர்களையும் நரம்பியல் நோயினால் பாதிப்பிற்குட்பட்ட நோயாளர்களையும் பரிசோதித்து அவர்களுக்கான சிகிச்சைகளை அளித்ததுடன், ஆலோசனைகளையும் வழங்கினர்.

மேலும், அவ்வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைகள் செய்வதற்குரிய வசதிகள் இல்லாமையால் பரிசோதிக்கப்பட்ட நோயாளர்களைப் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றி அங்கு வைத்து அவர்களுக்குரிய சிகிச்சைகளை வழங்கினர். (3-20370)





மந்திகை ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சைப் பணியில் கனடா நிபுணர்கள்.
(படங்கள்:கரவெட்டிச் செய்தியாளர்)

# நூல்வரிசை



நூல் : காசிநாதர் மான்மியம் (நினைவு வெளியீடு)
ஆசிரியர் : சைவத்திரு. கா.சிவபாலன்
கணனிப் பதிப்பு: திருக்கணிதப் பதிப்பகம்

அமரர் கந்தர் காசிநாதர் அவர்களின் அமரத்துவத்தை முன்னிட்டு அவரது புதல்வன் சைவத்திரு. கா.சிவபாலனால் வெளியிடப்பட்ட 'காசிநாதர் மான்மியம்' நூலின் அட்டைப்படத்திலே அமரர் பணிபுரிந்த சந்திரமௌலீச வித்தியாசாலையின் அழகிய வடிவமைப்புக் கொண்ட மாடிக் கட்டடங்களையும் அமரரின் வெள்ளை வஸ்திரத்துடன் அழகுறு வர்ணப் படத்தையும் தாங்கி வெளிவந்துள்ளது.

உள்ளே, தெல்லிநகர்ப் பதியிலே வீற்றிருந்து வேண்டுவார்க்கு வேண்டும் வரமளிக்கும் ஆதி துர்க்கையின் வரலாற்றைச் சித்திரிக்கும் ஒரு பாடலும் தொடர்ந்து பஞ்சபுராணங்களும் இடம்பெற்றுள்ளன. சிவஸ்ரீ அ.சிவசாமிக்குருக்கள் எழுதிய 'சந்திபுர தல வரலாறு' அடுத்ததாக நூலை அலங்கரிக்கின்றது.

நூலின் 'இயல் 2' என்ற பகுதியில் உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை, பண்டிதர் ம.வே. குருகவி மகாலிங்கசிவம், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பண்டிதர் ம.க.வே.திருஞானசம்பந்தர் ஆகியோர் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளைப் 'பேரறிஞர்கள்' என்ற பகுதியிலும் தனது தந்தையின் நட்புக்குரிய பாத்திரமான இந்துபோட் சு.இராசரத்தினம் பற்றியும் தந்தையாரின் குரு சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

'இயல் 3' இல் 'சான்றோர்கள் வரிசையில்..." என்ற பகுதியில் கற்றறிந்த பெரியார்கள் 26 பேரின் வாழ்க்கைக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. 'இயல் 4' இல் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாசாலை பற்றிய பூர்வீக செய்திக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

நூலின் பின் அட்டைப்பகுதியில் மட்டுவில் பகுதியில் பிரசித்திபெற்ற மூன்று ஆலயங்களின் பூர்வீகத் தோற்றப்பொலிவுடைய படங்கள் காணப்படுகின்றன.

ஆகவே, அமரத்துவம் அடைந்த கந்தர் காசிநாதர் அவர்களின் நினைவாக அவரது மகன் சிவத்திரு.கா.சிவபாலன் அவர்களால் வெளியிடப்பட்ட இந்நூல் நினைவுமலர் என்றில்லாது, தக்க பெயரிட்டு 'காசிநாதர் மான்மியம்' என்று வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் அமரரரைப் பற்றி மட்டும் கூறாது, மட்டுவில் பகுதி சந்திரமௌலீச ஆலயம், மட்டுவிலிலுள்ள பழம்பெரும் தலங்கள், சான்றோர்கள் எனப் பலதையும் தனதாக்கி ஒரு வரலாற்று ஆதாரமாக வெளியிடப்பட்டுள்ளது என்று குறிப்பிடின் மிகையாகாது.

- தெல்லியூர் சி.ஹரிகரன்.



நூல் : சதுரங்கத்தில் இறுதியாட்டம்
எழுதியவர் : திரு.சி.வித்தியாதரன்
வெளியீடு : ஹரிகஸ்பரோ சதுரங்க அக்கடமி


சதுரங்க விளையாட்டானது மன ஒருமைப்பாடு (Concentration), ஞாபகசக்தி (Memory), தீர்மானமெடுக்கும் தன்மை (Decision Making), ஆராய்ந்துகொள்ளும் திறன் (Cognitive Level), ஆளுமை (Personality) என்பவற்றை வளர்க்கும் ஒரு விளையாட்டாகும். உலகெங்குமிருந்து வெளிவரும் விளையாட்டுப் பற்றிய நூல்களில் ஏறத்தாழ எண்பது சதவீதமானவை (80%) சதுரங்க விளையாட்டுப் பற்றிய நூல்களே. ஆனால், இலங்கையில் தரமான சதுரங்க நூல்கள் மிகக்குறைவு. இக்குறையினை நிவர்த்தி செய்யும் முகமாக 'சதுரங்கத்தில் இறுதியாட்டம்' என்னும் இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூலின் ஆசிரியரான சி.வித்தியாதரன் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக யாழ். மண்ணில் பல போட்டிகளில் விளையாடியும் பல போட்டிகளை நடத்தியும் பல பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சதுரங்கக் கருத்தரங்குகளை நடத்தியும் அனுபவங்களைப் பெற்றவர். இவர் எழுதிய இந்நூல் இலங்கையில் இறுதியாட்டம் பற்றி தமிழ்மொழியில் எழுதி வெளியாகிய முதல்நூல் என்பது மனங்கொள்ளத்தக்கது.

இந்நூலில் இவர் நூற்றுநாற்பத்து மூன்று (143) இறுதியாட்ட நிலைகளைப் (Positions) படங்களுடன் வெகுவிரிவாகத் தந்துள்ளார். இந்நூல் பத்து அத்தியாயங்களைக் கொண்டது.

சதுரங்க விளையாட்டில் இறுதியாட்டம் மிகமுக்கியமான படிமுறையாகும். ஒருவர் சரியான ஆரம்ப ஆட்டத்தினைக் கொண்டிருப்பினும் அவரின் வெற்றி, தோல்வியினைத் தீர்மானிப்பது இறுதியாட்டமே. ஒரு காய் கூடுதலாகவுள்ளபோதும் எவ்வாறு வெற்றியைத் தனதாக்குவது என்பது தெரிந்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு அத்தியாயத்திலும் முறையே அடிப்படையான Checkmate முறைகள், இறுதியாட்டத்தில் இராஜாவும், சிப்பாயும் உள்ளபோது, இறுதியாட்டத்தில் மந்திரி, சிப்பாய் உள்ளபோது, இறுதியாட்டத்தில் மந்திரி குதிரைச் சிப்பாய் உள்ளபோது, இறுதியாட்டத்தில் மந்திரி எதிர் குதிரையுள்ளபோது இது பேன்ற பலநிலைமைகளில் சிரமமின்றி விளையாட்டினைச் சாதகமாக்கி வெற்றி பெறலாம் என்பதனை நூலாசிரியர் இந்நூலில் மிகத் தெளிவாக விளக்கி எழுதியுள்ளார். இந்நூலானது சதுரங்க விளையாட்டு வீரர் ஒவ்வொருவருக்கும் மிகவும் பயனுள்ளது என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

- என்.சோதிநாதன்.



நூல் : நங்கை
எழுதியவர் : திருமதி சரோஜா சிவச்சந்திரன்
வெளியீடு: மகளிர் அபிவிருத்தி நிலையம்

நங்கை இதழின் 21/22ஆவது இதழ் வெளிவந்துள்ளது. மகளிர் அபி விருத்தி நிலையத்தினரால் வெளியிடப்பட்டுவரும் இவ்விதழின் சுமையோடு சுமையாகும் வாழ்க்கைச் செலவு, பெண்களின் அரசியல் பிரதிநிதித்து வத்தை அதிகரித்தல், சமாதானத்தை நோக்கிய பயணம், சிறுவர் - சிறுமியர் துஷ்பிர யோகத்திற்கு எதிரான சட்டங்களும் விளக்கங்களும் இன்றைய அரசியல் நெருக்கடியும் சமாதானச் செயற்பாடுகளும் தொடர்பான வடயங்கள் பற்றியும் மற்றும் கடிதங்கள், சேமிப்புத்திட்டம், மகளிர் அமைப்புகளை இணைக்கும் வலைப்பின்னல் தொடர்பான விடயங்கள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகப் பல்மருத்துவத்துறைப் போதனாசிரியர் டாக்டர் யாழினி சிவச்சந்திரன், யாழ். மாவட்ட நீதிபதி த.விக்னராஜா, பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி சி.கதிர்வேற்பிள்ளை, யாழ். மாவட்ட தொழில் அலுவலக உதவித் தொழில் ஆணையாளர் சி.முத்துக்குமாரசுவாமி உட்படப் பலர் இவ்விதழில் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். இவ்விதழ் அனைவரும் படித்துப் பயன்பெறக்கூடிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

- கங்கா.



நூல் : மழைக்குறி
ஆசிரியர் : சி.சுந்திரராஜா
வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம் - சென்னை.

மழைக்குறி என்ற நாவலை முதற்பதிப்பாக வெளியிட்டிருக்கிறார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி.சுந்தரராஜா. கொடுமையும் அக்கிரமமும் நிந்தனையும் விரவிய இந்தச் சமூக அமைப்பு நிலைத்து நிற்பதற்கு எந்தவித நியாயமுமில்லை. ஏகாதிபத்யம் எச்ச சொச்சங்களை மட்டுமே விட்டுச் சென்றதொன்று அல்ல. வாங்குதல் விற்றல் மூலம் ஈட்டப்படுகின்ற உபரிப் பெறுமானம் எத்தனை க(ா)டைத தனமாக மனிதத்தை நெறிப்படுத்தி இலாபமீட்டியிருக்கின்றது. இத்தகைய சூழலில் வியர்வையை மண்ணுக்கும் வேதனைகளைத் தமக்குள்ளும் கொண்டு நசிகின்ற விவசாயிகள் மகோன்னதமாய்த் தொடங்கி விட்ட போரட்டத்தில் கூலி உழைப்பாளிகளின் அத்துவிதத்தை சர்வதேசிய ரீதியில் ஆனால், தேசிய களத்தில் யதார்த்தமாய் அணுகுவதே இந் நாவலின் அமைப்பாகும்.

மனிதகுல நீதிக்காக மனிதனே வீறுகொண்டெழுகின்ற கோலத்தின் நிகழ்வுகள் விஞ்ஞான பூர்வமாய் அந்த வியத்தகு மானிட உந்துதலுக்கான காரணிகள் பின்னமையில் உணர்த்தப்படுகின்றன. குறியீட்டு வடிவெடுத்து அடிமை விலங்குகள் நொருக்கப்படுகின்றன. விமோசன வழிக்கு ஒளியூட்டுகின்றன.

இந் நாவலின் நாயகன் உண்மையை வெறுமனே உணர்ந்தவனல்ல நிலைநாட்டியவன். அதனால் மரணத்தில் வாழ்பவன் வர்க்கப்போராட்டத்தை நீதிப்படுத்துவதுடன் "மழைக்குறி" நிற்கவில்லை. நசிந்து கொண்ட வர்க்கம் சர்வ ஆதிக்கமும் அடைவதையும் கோடிடுகின்றது.

பின் - அட்டை முதற் பதிப்பிலிருந்து - (1975)

## தாய்மார்களே மறந்து விட்டீர்களா?

**வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், நண்பர்கள், உறவினர்களுக்கு**

பிறக்கப்போகும் புதுவருடத்தை முன்னிட்டு அவர்களுக்கு அனுப்ப வேண்டிய உடை, உணவு, அலங்காரப்பொருள்கள் அத்துடன் கடிதங்கள், வீடியோ நாடாக்கள், அல்பங்கள் ஆகியவற்றை உலகின் எந்த நாட்டிற்கும் குறைந்த கட்டணத்தில் விரைவாக எம்மால் பொதி செய்து அனுப்பிவைக்கப்படும்.

**கட்டண விவரம்**

| | |
|---|---|
| பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் இத்தாலி, கொலண்ட். | 1kg - 750/= |
| கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, லண்டன் | 1kg–1000/= |

**தொடர்புகளுக்கு:**
RAINBOW TRAVEL & TOURS
32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(அபிநயா நகை மாடத்துக்குமேல்)
தொலைபேசி–2223918, 0777328219

குறிப்பு: **எமது ஸ்தாபனம் கொழும்பைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்குகிறது.**
(42739)


## தென்மராட்சியில் இன்று மருத்துவமுகாம்

சாவகச்சேரி,மார்ச்5

கொழும்பில் இருந்து வருகைதரும் வைத்தியக் குழுவும் தென்னிந்திய திருச்சபையினால நடத்தப்படும் இணுவில் வைத்தியசாலையின் வைத்தியக் குழுவும் இணைந்து நடத்தும் பொது வைத்திய முகாம் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமிற்கான ஏற்பாட்டை இணுவில் வைத்தியசாலையில் பணிபுரியும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த தாதி திருமதி வொட்சன் ஏற்பாடு செய்துள்ளார். (31-202)

## இலத்திரனியல் பயிற்சிக்கு பெண்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,மார்ச்5

பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் இலத்திரனியல் பயிற்சி பெறவிரும்பும் பெண்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பெண்களின் அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் 9 மாதங்கள் நடத்தப்படவுள்ள இப்பயிற்சி நெறியில் இணைந்து கற்க விரும்பும் பெண்கள், தமது விண்ணப்பங்களை பெண்கள் அபிவிருத்தி நிறுவனம், பேரின்பநாயகம் வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (8-204)

## பெருந்திருவிழா

வரணி,மார்ச் 5

வரணி, தாவளை, இயற்றாலை, கல்வளை ஸ்ரீ வல்லபை மணாளன் விநாயகர் தேவஸ்தானப் பெருந்திருவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10.15 மணிக்கு ஆரம்பமாகும்.

பிரதம குரு கிரியாமணி சிவஸ்ரீ க.சுப்பிரமணியக் குருக்களின் தலைமையில் கிரியைகள் நடைபெறும். (3-170-202)

## கணனிப் பயிற்சியை பூர்த்திசெய்தோருக்கு சான்றிதழ்கள்

தென்மராட்சி,மார்ச் 5

முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் நடைபெற்ற கணனிப் பயிற்சியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

மீசாலை, வீரசிங்கம் மகாவித்தியாலத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வித்தியாலய அதிபர் கு.சிவானந்தம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வுக்கு தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) செ.உதயகுமாரும், சிறப்பு விருந்தினராக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முறைசாரப் பிரிவு), தா.பாலசுந்தரமும் கலந்துகொள்வர்.

கடந்த வருடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் இப்பயிற்சி நெறி நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (8-117)

## சமய சந்நிதிகளில்

அல்லாஸ் - சற்கோட்டை புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று வியாழக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது

நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 5.00. மணிக்கு செபமாலை வழிபாட்டுடன் நடைபெறும். எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5மணிக்கு நற்கருணைநாதர் வழிபாடும் தொடர்ந்து மறுநாள் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச்சொரூபப்பவனியும், திருசொரூப ஆசீரும் நடைபெறும்.(8-51)

## கண்ணீர் அஞ்சலி

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைத் தமது வதிவிடமாகவும் கொண்டவரான

### பொன்னம்பலம் சின்னத்துரை



(உரிமையாளர். கபிலா காலணியகம். யாழ்ப்பாணம்)

அவர்கள் 02.03.2005 புதன்கிழமை காலமாகிவிட்டார். அவரது மறைவு எமக்கு மிகுந்த மன வேதனையைத் தருகிறது. அன்னாரின் பிரிவால் வருந்தி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*288, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்,* T.P.2567
(சி-41303) (39)

- உரிமையாளரும் ஊழியர்களும்,
சிவா நறுமணப் பூங்கா.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 - 07 - 1944 | 04 - 02 - 2005 |



எமது குடும்பத் தலைவர்

### அமரர் முருகேசு தர்மலிங்கம்

*(உழவு இயந்திர திருத்துநர்)*

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (06-03-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் நுணுவில் குளக்கோட்டு விநாயகர் ஆலய சுற்றாடலிலும், வீட்டுக்கிருத்தியங்கள் எமது இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவிலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சாமியன் அரசடி,*
*கரவெட்டி மத்தி,*
*கரவெட்டி.*
(42741) (39) -குடும்பத்தினர்.

## இளங்கலைஞர் மன்றம்
## வருடாந்த இசைவிழா 2005

**மூன்றாம் நாள் சனிக்கிழமை (05.03.2005)**
[இளங்கலைஞர் மன்ற லண்டன் கிளை ஆதரவில் மன்றக்கலா மண்டபத்தில்]

மாலை
- 4.30 - 5.30 மங்கள இசை
- 5.30 - 5.55 குழுப்பாடல் உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழக மாணவர்கள்
- 5.55 - 6.10 வயலினிசை. இளங்கலைஞர்மன்ற மாணவர்கள்.
- 6.10 - 6.40 பாட்டு D. ஞானசொரூபன்
- 6.40 - 7.10 புல்லாங்குழல் இசை அ.புவனேந்திரன்
- 7.10 - 7.30 மங்கள விளக்கேற்றல் சங்கீதபஷணம் அ.கணபதிப்பிள்ளை தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராசா
- 7.30 - 8.15 பாட்டு சுகன்யா அரவிந்தன்
- 8.15 - 9.00 பாட்டு தவநாதன் றொபேட்
- 9.00 - 10.00 நாட்டியாஞ்சலி நாட்டியக்கலைமணி அகல்யா - சுந்தரம் அவர்களின் மாணவர்கள்.

(சி.41288)(42-11-45) கலைஞர்கள், ரசிகர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சட்டநாதர் வீதி,*
*நல்லூர்.*
**இளங்கலைஞர் மன்றம்.**


## ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி

*(துறைசார் ஆலோசனை வழங்குநர், நிர்மாணதாரர்)*

### பணிநிலை வேண்டுகை

கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைகளிற்குத் தகுதியானவர்களிடம் இருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

- 1. கணிய அளவீட்டாளர் — Quantity Surveyor
- 2. கட்டட நிர்மாண மேற்பார்வையாளர் (ஆண்) — Building Supervisor
- 3. படவரைஞர் — Draftsman

- 1. மின்ஒட்டு வேலையாளர் — Welder
- 2. மரவேலைப்பணியாளர் — Carpenter
- 3. இயந்திரம் திருத்துநர் — Mechanic
- 4. நாள்கூலி வேலையாளர் — Labourer
- 5. காவலாளி — Watcher

- 1. மேசன் ஒப்பந்தகாரர் — Masontry Contractor
- 2. மரவேலை ஒப்பந்தகாரர் — Carpentry Contractor

மேற்குறிப்பிட்ட பணிநிலைகளுக்குத் தகுதியானவர்கள் தமது தகுதிச்சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்விற்குச் சமுகம் தரவும்.

நேர்காணல் நடைபெறும் இடம்: ஜெனரல் இன்ஜினியரிங் கொம்பனி 45A, கனகபுரம், கிளிநொச்சி.
காலம்: 07.03.2005 (திங்கள்)
நேரம்: காலை 9.00 தொடக்கம் மாலை 5.00 வரை

**பணிப்பாளர்,**
**ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி,**
45A, கனகபுரம், கிளிநொச்சி.
(C/41311)(42)



Jayoda ஜயோதா ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7655674 முதல் 7667601 வரை
சீட்டிழுப்பு இல. 114 திகதி 03-3-2005

வெற்றி எண்கள் **9 5 7 8 1 6** சுப்பர் எண் **21**

சுப்பர் ஜக்பொட் பரிசு 2,00,96,375/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 2,00,96,375/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 101 | 5,000/- | 5,05,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,043 | 500/- | 5,21,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,428 | 50/- | 5,21,400/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 103,314 | 10/- | 10,33,140/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 5,000/- | 60,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 104 | 1,000/- | 1,04,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,045 | 100/- | 1,04,500/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,327 | 20/- | 2,06,540/- |
| மொத்தம் | 126,394 | | 52,08,680/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 52,08,680/-

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
**ரூ. 2,03,86,250/-**

தொடர் இல. 6709328 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 மார்ச் 03 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ரூபா 75,325/- பெறுமதியான லட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7658749-3-61
7662301-1-38
7663311-4-05
7659156-0-47
7659589-6-43
7665561-7-40
7661886-7-74
7659021-2-63

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புதிய சோபா செற்றிகள், கட்டில்கள் (3x6) அதற்குரிய மெத்தைகள், கங்கர்கள், பாவித்த கவுண்டர், பேப்பர் அமர்த்தும் இயந் திரம் மற்றும் வேறு பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.குமாரசாமி, 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (42724)

## கார் விற்பனைக்கு

எம்மிடம் 18 - XXXX வெள்ளை நிறக் கார் ஹொண்டா சிவிக் 11 ஸ்ரீ XXXX சிவப்பு நிறக் கார் லான்ட்சர் - இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.884, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். T.P 0777 758147. (42647)

நல்ல நிலையிலுள்ள மொறிஸ் 1000 - 1ஸ்ரீ ஒன்பதினாயிரத்திச் சொச்ச இலக்கத்தை யுடைய கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.ந.அருணாசலம், குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். (42668)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுகாதார முறையில் சுத்தம் செய்து தினமும் வேண்டிய அளவு களில் பெற்றுக்கொள்ளலாம். 1Kg 190/-. சுத்தம் செய்யப்பட்டது. 280/-. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (42607)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்த மாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற் றுக் கொள்ளலாம். தொடர்பு: R.சாந்தகுமார் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (42708)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற் பனைக்குண்டு. விலைகுறைக்கப்பட்டுள்ளது. தொடர்பு: ந.கணேஸ்வரன் இல.17, நாவலடி லேன், பேச்சியம்மன் கோயிலடி வண்.வடமேற்கு, யாழ்ப்பாணம். (42676)

Prima உயிர் Broiler இறைச்சிக் மற்றும் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42682)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் சுற்று வட்டத்தில் டச்சு வீதி, மருதடிச் சந்தியில் வீடு கட்டக்கூடிய காணி (தென்னை வள முள்ளது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு களுக்கு T.P.: 0777 676593, 0776 - 745858 S.கமலநாதன், கந்தசாமி கோயில் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (சி-41253)

கொடிகாமம் நாவலடிப் பாடசாலைக்கு முன்னால் 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: சி.அருளம்பலம், பஸ்நிலையம், கொடிகாமம். (சி-41284)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான Pure Bred Dobbamann Pincher 1 Great Dane 1 உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், நல்லூர் பாம் சென்ரர், 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42681)

எம்மிடம் ஜேர்மன் சர்பேட் டோமன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. (பூச்சி நீக்கப்பட்டது) தொடர்பு: இல.57, கே.கே.எஸ் வீதி, (கொக்கு வில் சந்திக்கும் பூநாறி மரத்தடிச் சந்திக்கும் இடையில்) யாழ்ப்பாணம். (42734)

## நாடகங்கள்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நாடக நூல்கள் 1. யாழ்ப்பாணமா? கொழும்பா? 2. எங்கள் நாடு 3. வானொலி நாடகம் எழுதுவது எப்படி? 4. இமயம் எங்களது இன்றைய வாழ்வைச் சித திரிக்கும் 28 சமூக நவீன நாடகங்கள். (42652)

## தவறிவிட்டது

100, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயராசா என்பவரது தே.அ.அ. மற்றும் சாரதி அனுமதி அட்டை என்பன தவறிவிட்டது. கண்டெடுத்தவர் மேற் குறிப்பிட்ட முகவரியில் அல்லது சந்நிதி முருகன் மினிபஸ் 769 K.K.S வீதி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். 42696)

## வாடகைக்கு

திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் வீடு ஒன்றில் அறை வாடகைக்குண்டு. முழு வீடு வளவினையும் நல்ல முறையில் பராமரிக்கக் கூடிய மாணவர்கள் அல்லது வேலை பார்க்கும் ஆண்கள் மட்டும். தொடர்பு: 021 222 2478. (42737)

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, U.K.இல் உள்ள 1958 ஆம் ஆண்டு பிறந்த அஸ்வினி 3 ஆம் பாதம் லக்கினத்தில் செவ்வாய் உள்ள எஞ்சினியர் மணமகனுக்கு நல்ல அழகான 67, 68,69ஆம் ஆண்டில் பிறந்த சிவந்த மணப் பெண் தேவை. மணமகன் இங்கு வந்து திருமணம் செய்வார். தொடர்பு M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (42573)

கௌரவ குடும்பம் உதயச் செவ்வாய் உள்ள தும் 1974ஆம் ஆண்டு பிறந்த அனுஷ நட்சத திரம் B.Com பட்டதாரி, பாவக் கிரகங்கள் 37¾, U.K இல் 10 வருடமாக இருக்கின்றார். சொந்த ஊரில் வந்து திருமணம் செய்து இலங்கையில் தொழில் புரிய இருப்பவருக்கு அழகான பட்டதாரிப் பெண் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (42570)

நல்ல கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 1970ஆம் ஆண்டு பிறந்த, 8இல் செவ்வாய், அத்தம் 3ஆம் பாதம், 5'4" உயரமுள்ள அழகான மண மகனுக்கு U.K இல் P.R. உள்ள அழகான மண மகள் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (42571)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976.08.17 பரணி கிரகபாவம் 28 குற்றமற்ற ஆறு அடி உயரம் அழகிய மணமகன் BCA Computer பட்டதாரி P.R. இல்லாமல் அண்ணன், மாமன்மார் குடும்பத்துடன் U.K சுப்பமார்கற் காசாளருக்கு P.R. உடைய கிரகபாவம் குறைந்த பொருத்தமான படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்பு: பிரேம்மாஸ்ரர், டச்சு வீதி, சங்குவேலி T.P. 077 6621684. (42656)

கௌரவ குடும்பத்தைச் சார்ந்த, 4இல் செவ்வா யுள்ள, 1973ஆம் ஆண்டு சுவாதி நட்சத்திரம் P.R. உள்ள ஹொலன் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (42731)

கௌரவ குடும்பத்தைச் சார்ந்த லக்கின பாவம் (10) அனுஷம் 3ஆம் பாதம் 1975ஆம் ஆண்டு P.R. உள்ள U.K மணமகனுக்கு படித்த, சிவந்த, அழகான மணமகள் தேவை. M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (42731)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971ஆம் ஆண்டு பிறந்த உத்தராடம் 3ஆம் பாதம், அரச உத்தியோகம் பார்க்கும் அழகான பெண்ணுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் நற்குணமுள்ள மணமகன் தேவை. தொடர்பு M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (42572)

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1969ஆம் ஆண்டு 4இல் செவ்வாய், உத்தரம் முதலாம் பாதம், B.A பட்டதாரி ஆசிரியைக்கு நற்குண முள்ள அரச உத்தியோகம் பார்க்கும் மண மகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (42574)

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 8இல் செவ்வாய் 1962ஆம் ஆண்டு பிறந்த பூரம் முதலாம பாதம் 5'2" உயரமுடைய சைவபோசன அழகான படித்த மணமகளுக்கு அரச உத்தியோகம புரி யும் மணமகன் தேவை. M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (42575)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது33 ஆங்கில பயிற்சிபெற்ற ஆசிரியைக்கு அரசவங்கி, கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றும் பட்டதாரி உத்தியோகத்தர் மணமகனை பெற்றோர் எதிர்பார்க் கின்றனர். (சீதனமுண்டு) தொடர்பு: சண்முகராஜா (மதிப்பாளர்) 387, கோயில் வீதி,நல்லூர்.(42726)

கௌரவ குடும்பத்தை சார்ந்த லக்கின பாவம் - 25 1977ஆம் ஆண்டு ரோகினி நட்சத்திரம் 3ஆம பாதம் சைவபோசனம் உள்ள மிக அழகான மண மகளுக்கு சைவபோசனமுள்ள உள்நாடு அரச சேவை புரியும் மணமகன் தேவை. M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி.(42731)


**பயிற்சி வகுப்பு**

பொருளியல் மற்றும் ஆங்கில வகுப்புகள் பிரத்தியேகமான முறையில் நடத்தப்படு கின்றன.

தொடர்புகளுக்கு: 0776503385 (42713)(21-16)



**Organ/Violin Notes**

எமது மாதாந்த வெளியீடான இசைக் குறிப்புகள் பாகம் 36, Key Board Exercise, கேள்வி ஞானம் ஆகிய புத்தகங்கள் வெளிவந்துள்ளன.

S.S.ரஜீந்திரன
கரவீனா இசை மன்றம்
751, கோவில் வீதி நல்லூர்.
T.P. 0777-031293
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 m தெற்கே)

(42687)(21-16)



உ

**ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்**

இந்தியாவிலிருந்து வந்துள்ள

**ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளி நாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள் ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது

**அறை எண் 5, பிள்ளையார் இன்,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
**Room No.5, Pillaiyar Inn**
31, Manipay Road, Jaffna.
Phone: 021 222 2839
Mobile: 0776 923623

(C/41285)



**M.A (காமராஜர் பல்கலைக்கழகம்-மதுரை)**

- இதற்குரிய பதிவுகள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன,
- பதிவுகளை எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம்.
- சகல பாடங்களுக்குமுரிய விரிவுரைகளும் மார்ச் 20ஆம் திகதி ஆரம்பமாகின்றன.
- பட்டதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.
- விவரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு:
யாழ்.இணைப்பாளர் (காமராஜர் பல்கலைக்கழகம்)
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி யாழ்.

(42709)(21-16)


## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும் யாழ்ப்பாணம்
'கபிலா காலணியகம' உரிமையாளருமாகிய

**பொன்னம்பலம் சின்னத்துரை**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

*இல.165,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.*


**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.**

(சி.41307) (42-16-21)

## ஆம் மாத நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

**நவரத்தினராஜா பிறேம்குமார்**



தோற்றம்
16-10-1979
மறைவு
07-09-2004

*விழாமல் வாழ்ந்தோம் நாம் வேரானீர்*
*விழுமுன்னே உம்போல யார் தாங்குவார்?*
*தாலாட்டவில்லை எங்கள் தசை ஆடுது*
*தந்தை என்றும் பிள்ளை என்றும் உறவாகுது*
*வாழாமல் தாழ்கின்றோம் விழி நீரிலே*
*சுவரில் தொங்கும் படமாக நீர் மாறினீர்!*

இன்று (05.03.2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை, வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(சி/41302) (24)

**அன்பு மனைவி, பிள்ளை, பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர்.**

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 – 06 – 1926



மறைவு 15 – 02 – 2004

## அமரர் கவிஞர் மு.கந்தப்பு (மன்னவன்)

(கரவெட்டி மத்தி)

திதி: 05.03.2005

அறம் செய்த கையும் ஓயும்
மக்களை அன்பால் தூக்கிப்
புறம்போன காலும் ஓயும்
செந்தமிழ் மன்னவன் சொல்லின்
திறம்கேட்ட காதும் ஓயும்
செயல் கண்ட கண்ணும் ஓயும்
மறவனைச் சுமக்கும் - எம்
மனம் மட்டும் ஓயவில்லை!

இன்று (05.03.2005) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் மதியபோசன வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*சிறுகுடில்,*
*கரவெட்டி.*
(42714)(42-16-17)

மீளாத்துயர்கொண்ட
**குடும்பத்தினர்.**

# கேள்வி அறிவித்தல்

இடிபாடுகள் அகற்றும் வேலைத்திட்டத்தின் கீழ் சுனாமி அனர்த்தத்தினால பாதிக்கப்பட்ட பின்வரும் அவசர வேலைகள் செய்வது தொடர்பான கேள்விகள் கேள்விச் சபைத் தலைவரும் அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளருமான என்னால் 03.02.2005 தொடக்கம் 11.03.2005 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அதே தினம் பிற்பகல் 4.00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| வேலையின் பெயர் | இக்ராட் தரம் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| *ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட இடிபாடுகள் அகற்றி மட்டப்படுத்துதல்*<br>a) மருதங்கேணி உ.அ.அ.பிரிவு போக்கறுப்பு கி.சே.J/434<br>மருதங்கேணி உ.அ.அ.பிரிவு<br>b) வெற்றிலைக்கேணி கி.சே J/432<br>c) சுண்டிக்குளம் கி.சே J/435<br>d) மருதங்கேணி கி.சே J/428<br>e) செம்பியன்பற்று கி.சே J/426<br>f) வத்திராயன் கி.சே J/429<br>g) ஆழியவளை கி.சே J/431<br>h) உடுத்துறை கி.சே J/430<br>i) முள்ளியான் கி.சே J/433 | M-4 | ரூ. 280,000/= | ரூபா. 3000/= |

1. மேற்படி வேலைகளுக்கமைவாகக் கேள்விப்பத்திரப் பணத்தைத் தங்களுக்கு வசதியான அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிட்டு *அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.* என்ற பெயரில் வங்கிக் கட்டளையைப் பெற்று (Pay Order) *அரசாங்க அதிபரின் காரியாலயமாகிய மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்* என்னும் முகவரியில் சமர்ப்பித்து 04-03-2005 ஆம் திகதி தொடக்கம் 10.03.2005 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிவரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. மேற்படி வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் இருபிரதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு மூலப்பிரதியும் இணைப் பிரதியையும் தனித் தனிக் கடித உறைகளில் இடப்பட்டு உறைகளின் இடது பக்க மேற பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித் தனியாக உறைகளில் இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இரண்டையும் பிறிதோர் உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரே முத்திரையிட்டு *அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணத்தில்* வைக்கப படடுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் 11.03.2005 ஆம திகதி பி.ப. 3.30 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொணடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
3. கேள்விச்சபையால் தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவுசெயயப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வேலை நாள்களுக்குள் கேள்விச சபைத்தலைவருடன் வேலைக்கான ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாததிட்டு, உரிய காலத்தில் வேலையைப் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எவ்வித காலதாமதமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. கேளவி ஆவணங்களை இலவசமாகப் *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் இல:29, செட்டித்தெரு, யாழ்ப்பாணம* என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் பார்வையிடுவதுடன் இந்த வேலைகள் தொடர்பான மேலதிக விவரங்களைக் குறிப்பிட்ட காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகின்றேன்.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
2005.03.02.
(சி.41293)(42-16-17)

ஒப்பம்: **க.கணேஸ்**
**அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளரும், கேள்விச் சபைத் தலைவரும். யாழ்ப்பாணம்.**

# நல்லை ஆதீனத்தில் யோகாசன வகுப்புகள

யாழ்ப்பாணம்,மார்ச்5

பெங்களூரில் இருந்து வருகைதந்துள்ள ஸ்ரீ ஸ்ரீரவிசங்கர் சுவாமிகளின் சிஷ்யர்களால் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் தொடர்ந்து 4 தினங்களுக்கு அதிகாலை 5.30 மணி முதல் 7.30 மணிவரை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் யோகாதியான வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

(3-202)

# சுகாதார ஊழியருக்குப் பண்டிகை முற்பணம் வழங்க நடவடிக்கை

வலி.தென்மேற்கு,மார்ச்5

எதிர்வரும் சித்திரைமாத தமிழ் -சிங்கள புததாண்டுப் பண்டிகையை முன்னிட்டு யாழ்.சுகாதாரத் திணைக்களத்திலும் மற்றும் யாழ்.மாவட்ட அரசின் வைத்தியசாலைகளிலும் கடமையாற்றும் ஊழியர்களுக்கு பண்டிகை முற்பணம் வழங்கப்படவுள்ளது.

இந்த பண்டிகை முற்பணத்தைப் பெற விரும்பும் ஊழியர்கள் எதிர்வரும் 07ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பத்தை நிறுவனத் தலைவருக்கு ஊடாக அனுப்பிவைக்கவேண்டும் என்று யாழ்.சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(3-135)

# பிரிவுபசார விழாவும் பாராட்டு விழாவும்

யாழ்ப்பாணம்,மார்ச்5

சங்கானைக் கல்விக் கோட்ட அதிபர் சங்கம், சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற 4 அதிபர்களுக்குப் பிரிவுபசார விழாவும் பதவி உயர்வு பெற்ற அதிபர் ஒருவருக்குப் பாராட்டு விழாவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குச் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடத்தவுள்ளது.

வட்டு. இந்துக் கல்லூரி அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர்களான வே. சிவானந்தன், நா.நடராசா, அ.அருணகிரிநாதன், கா.சிவநேசன் ஆகியோருக்குப் பிரிவுபசார விழாவும் -

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய முன்னாள் அதிபராகக் கடமையாற்றி, கல்விக் கோடடப் பணிப்பாளராகப் பதவிஉயர்வு பெற்ற ச.கைலாசநாதனுக்குப் பாராட்டு விழாவும் நடைபெறவுள்ளன.

இநநிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும் சிறப்பு விருந்தினராகச் சங்கானைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரமும் கலந்துகொள்வர்.

(3-29-202)

# சாயி நிலையத்தில் சிவராத்திரி நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,மார்ச்5

பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் சிவராத்திரி தினமான எதிர்வரும் 8ஆம் திகதி மாலை 6.00 மணிமுதல் மறுநாள் அதிகாலை 5.30 மணிவரை சிவராத்திரி நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. சிவா அஸ்டோத்திரம், சிவஅர்ச்சனை, சிவநாம பஜனை என்பன இடம பெறும்.

(ஐ)

# திருக்கேதீஸ்வரத்துக்கு பஸ் ஆசனப் பதிவு

யாழ்ப்பாணம்,மார்ச்5

திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி உற்சவத்திற்கென விசேட பஸ் சேவைகள் இடம் பெறவுள்ளன என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபைப் பொதுமுகாமையாளர் அறிவித்துளளார்.

யாழ்.பஸ்நிலையத்திலிருந்து 7 பஸ்களும் பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து 2 பஸ்களும் காரைநகரிலிருந்து ஒரு பஸ்ஸும் நேரடியாகத் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு நாளைமறுதினம் புறப்படவுள்ளன.

பயணம் செய்ய விரும்புவோர் ஆசனப் பதிவுகளை இன்று யாழ்.பஸ் நிலையத்தில் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-202)


## தேவை

A/L பரீட்சையில் கணிதம் அல்லதுகணக்கியலில் திறமைச் சித்தியுடன் O/Lஇல் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியுடையவர்கள் தேவை. பட்டயக் கணக்காளருககான பயிற்சியுடன் நல்ல சம்பளமும் வழங்கப்படும். உடன் தொடர்பு:
**140, பலாலி வீதி, திருநெல்வேலி**, T.P.: 222 2478

## தவறிவிட்டது

DIGITAL CAMERA MEMEORY STICK 64MB பிரதான வீதிக்கும் - ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் தற்செயலாகத் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: **இல.20, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்.**
T.P.: 0777 242552, 0776 922935.


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் நீண்டகாலமாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற
எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய

**திருவாட்டி தர்மசறோஜினி பஞ்சரட்ணம்**

அவர்களின் மறைவு பேரிழப்பாகும். ஆசிரியையின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களது துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். அன்னாருக்கு கணணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. **அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
பருத்தித்துறை. (சி.41300)(42-16-17)

# நீங்காத நினைவுகளில் ஐந்தாண்டுகள்

*பிறப்பு* 10 – 07 – 1927



*இறப்பு* 29 – 02 – 2000

## அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பு

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: 05–03–2005

பாரினில் பிறக்க வைத்தீர்
பார் புகழ வாழ வைத்தீர்
மனம் நிறையக் கல்வியூட்டினீர்
மறுவின்றியே வாழ்வமைத்தீர் - இன்று
வீசும் தென்றலாய் விண்ணவர் போற்றிட
விசும்பு சென்றீர் ஆண்டு ஐந்தென்ன
ஐந்தாயிரம் கழிந்தாலும் அழியாது உம் நினைவு
உம் ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*தம்பகாமம்,*
*பளை.*
(42710)(42-16-17)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி லோகேஸ்வரி விஜயரத்தினம்



இல.66, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கண்டி - கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரி விஜயரத்தினம் நேற்றுமுன்தினம் (03-03-2005) வியாழக்கிழமை அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம்பிள்ளை (கல்லூரி அதிபர்) - பவளநாயகியின் பாசமிகு புத்திரியும், விஜயரத்தினம் (சமாதான நீதிவான், முன்னாள் இயக்குநர் - யாழ். ஐக்கியவியாபாரச்சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் டாக்டர் விஜயகுமாரன் (பேராதனைப் பல்கலைக்கழக பல்வைத்தியசாலையின் சிறுவர் பல் வைத்தியப் பிரிவின் தலைவர்), சிவகுமாரி (பட்டதாரி ஆசிரியை), விஜயகுமாரி (கனடா) ஆகியோரின அனபுத் தாயாரும் Dr.புஸ்பராஜன், சுந்தரலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் லோகேஸ்வரன (ஆஸ்திரேலியா), கேதீஸ்வரன், சிவநாதன், குகநாதன் ஆகியோரின் சகோதரியும் மிதுஜன், குங்குமி, சுங கவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அனனாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-03-2005) சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு **A.F. RAYMOND Funeral Hall, 115, D.S Senanayake, Mawatha, Borella** இல் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 4மணிக்கு கனத்தை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

60-1/2, Ruthamawatha.
Colombo - 6
T.P: 011-2361664
077- 6926879 (42697)(42-16-17)

தகவல்:
**கு.விஜயரத்தினம்.**

## பொன்னம்பலம் சின்னத்துரை

**(உரிமையாளர், கபிலா காலணியகம் - கஸ்தூரியார்வீதி, கபிலா காலணியகம் - மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்)**



புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 209, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சின்னத்துரை அவர்கள் 02.03.2005ஆம் திகதி காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம பலம் - செல்லாச்சி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் நல்லதங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் பாசமிகு கணவரும் துவாரகன், சுதாகரன் (கனடா), ஜெகதீபன் (லணடன்), கோபிலன் (பிரான்ஸ்), கபிலன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பொன்னம்மா, காலஞ்சென்ற தில்லைநாதன் (முன்னாள் உரிமையாளர், கொழும்பு - நஷனல் கபே ) மற்றும் இராசமணி, சோம சுநதரம (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மாணிக்கவாசகர் (கனடா), பரமேஸ்வரி (சுவிஸ்) இராஜேஸ்வரி (சுவிஸ்), குணமணி (சுவிஸ்), ஜெகநாதன் (ஜேர்மனி), பாக்கியராணி (சுவிஸ்), யோகாம்பிகை, வைத்தியலிங்கம் (புங்குடுதீவு), சிவபாக்கியம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (06.03.2005)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*209, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P.: **021 222 2434,**
**021 222 3097** (42719)(42-16-17)

தகவல்:
**சி.துவாரகன், சி.கபிலன்**
**(மகன்மார்).**

# மெய்வன்மைப் போட்டிகள்

வலி.வடக்கு,மார்ச்5

கோண்டாவில் கிழக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ஆ.இரத்தினசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக பழைய மாணவனும் யாழ்பரியாக்கோப்பு ஆலய பங்கு தந்தையுமான வண.பிதா அருளம்பலம் ஸ்ரீபனும் சிறப்பு விருந்தினர்களாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி யசோதா செல்வராசாவும், சு.முத்துலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர். (3-86)

★ ★ ★

கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரான கி.சிவநேசனும் சிறப்பு விருந்தினராக வடமராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் இன்பமும் கலந்துகொள்வர். (3)

★ ★ ★

காரைநகர்,மார்ச்5

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன் பிரதம அதிதியாக கலந்து கொள்வர். (3-73)

## வேதாகம கலாசாலைக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம்,மார்ச்5

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் நடத்திவருகின்ற ஆணைப்பந்தி வேத சிவாகம குருகுல கலாசாலையில் அர்ச்சகாச்சாரியர் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய பயிற்சி நெறியில் சிவாச்சாரியர்களுக்கான விசேட வகுப்புகளும், கணனி, ஆங்கிலம் தொடர்பான கல்விப் போதனைகளும் இடம்பெறவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க விருமபுவோர், விண்ணப்படிவங்களை தலைமைச் செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம் என சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - கடந்த ஆறுமாதங்களாகப் பயற்சிபெற்ற மாணவர்களுக்கு தற்போது அரையாண்டுப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. (3-204)

# இளம் கலைஞர் மன்ற மூன்றாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்5

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசைவிழாவின் மூன்றாம்நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிகக்கு மங்கள இசையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு உரும்பிராய் ஸ்ரீசாயி கலைக்கழக மாணவர்களின் குழுப்பாடலும் மாலை 5.55 மணிக்கு வயலின் இசைநிகழ்வும் இடம்பெறும் இதில்

வயலின்- செந்தில்நாதன் அனுசியா, செல்வக்குமாரன் பவித்திரா, பரந்தாமன் மாதுமை. மிருதங்கம்- கே.அனந்த கோபன்.

மாலை 6.10 மணிக்கு எஸ்.ஞானசொருபனின் பாட்டுக்கச்சேரி நடைபெறும் பக்கவாத்தியங்களாக வயலின்- கே.பத்மநாதன், மிருதங்கம் - எஸ் வரதராஜசர்மா கெஞ்சிரா-கேநந்தகுமார் வாசிப்பர்.

மாலை 6.40 மணிக்கு அப்புத்துரை புவனேந்திரனின்-புல்லாங்குழல் இசை நடைபெறும், பக்கவாத்தியங்களாக, வயலின்- கிருஸ்ணவேணி மயிலவாகனம், மிருதங்கம்- வி.ரமணன் வாசிப்பர்

தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக தமிழ் துறைத் தலைவர் சி.சிவலிங்கராசாவின் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும்.

7.30 மணிக்கு சுகன்யா அரவிந்தனின் பாட்டுக்கச்சேரி நடைபெறும், பக்கவாத்தியங்களாக வயலின்- ஏ.ஜெயராமன்,மிருதங்கம் - கே.கஜன், கெஞ்சிரா-கே.நந்தகுமார் வாசிப்பர்.

தொடர்ந்து 8.15 மணிக்கு தவநாதன் றொபேட்டின் பாட்டுக்கச்சேரி நடைபெறும். பக்கவாத்தியங்களாக வயலின்-ஆர்.இராதகிருஸ்ணன், மிருதங்கம்- கே.கஜன், கடம்-என்.மாதவன், கெஞ்சிரா- கே.நந்தகுமார்,முகர்சிங்- எஸ்.செந்தூரன் வாசிப்பர்

நிறைவாக இரவு 9.00 மணிக்கு நாட்டியக் கலைமணி சுகன்யா சுந்தரத்தின் மாணவிகள் வழங்கும் நாட்டியாஞ்சலி நிகழ்வு நடைபெறும் பக்கவாத்தியங்களாக நட்டுவாங்கம் - அகல்யா சுந்தரம், மிரு தங்கம் - கே.நந்தகுமார், பாட்டு - சுகந்தி ரட்னேஸ்வரன், வயலின் - கிருஸ்ணவேணி மயில்வாகனம் வாசிப்பர். (3-204)

# நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 19 - 08 - 1979

இறப்பு 07 - 03 - 1998

யோகனந்தகுமார் டியூலன்
கடற்புலி கப்டன் கடலரசன்

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 25 - 04 - 1989



இறப்பு 22 - 01 - 2005

சிறிஸ்கந்தராசா யுவதீபா
(மாணவி ,O/L செஞ்சோலை மத்தியகல்லூரி கிளிநொச்சி)

இரண்டு நிகழ்வும் நடைபெறும் இடம்:
மு.யோகனந்தகுமார் (ரவி)
றஞ்சிதமலர், 4 ஆம் வட்டாரம்,
காட்டு ஆமணக்கு பிள்ளையார் கோவிலடி, கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல் :- ந.றட்னராஜா (மாமா). சு. சிறிஸ்காந்தராசா. துரை (அப்பா).
மயிலிட்டித்துறை நலன்புரிநிலையம். வியாபாரிமூலை. பருத்தித்துறை.

# பாண் விலை மாற்றம்

இன்று (05.03.2005) சனிக்கிழமை தொடக்கம் 450 கிராம் நிறைகொண்ட பாணின் ஆகக் கூடியசில்லறை விலை 22/= ரூபா ஆகும். என்பதனை அங்கத்தவர்களுக்கும், பாவனையாளர் களுக்கும் அறியத் தருகின்றோம். நிறை, தரம், விலை ஆகியவற்றில் குறைபாடுகள் இருப்பின் எமக்கு அறியத்தரவும்.

நிர்வாகம், யா/மா/பே/உ/சங்கம்,
யா/மா/வெ/உ/கூ/சங்கம்,
யா/மா/பே/உ/சங்க இணைப்புக் குழு.

(சி-41319)

# பிற்போடப்பட்டுள்ளது

## யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
## இல்ல மெய்வலுநர் போட்டி

இன்று (05.03.2005) சனிக்கிழமை நடைபெறவிருந்த மேற்படி போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(42749) -அதிபர்.

# 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 - 09 - 1909



உதிர்வு 05 - 03 - 1986

முதலியார்

## வைத்தியலிங்கம் மகேசன் (J.P)

தருமமும் நலமும் சேர்ந்த நண்ணருள் வாழ்வு பூண்டு
மருவிய சிவன்தாள் பெற்ற மகேசனே நின்சீர் ஆன்மா
தருவளர் வானோர் கூட்டம் தழுவிய சுகம் பொருந்தி
உருவளர் உமையாள் பாகன் ஒளிர்கழல் சுகிந்து வாழி.

லிங்க வாசா,
முதலியார் மகேசர் வீதி,
நவாலி. (42740) -குடும்பத்தினர்.


மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஓரேதின வெளியீடு [illegible] (சிறப்புத் தோற்றம்). நயன்தாரா, [illegible] நடித்த

சந்திரமுகி

காட்சி நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30

அடுத்த வெளியீடு: 11.03.2005 முதல் சூர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்) நடிப்பில் மாயாவி

நிரஞ்சனாஸ் சங்கானை

ஜெயம்ரவி, அஸ்வினி, நதியா, பிரகாஷ்ராஜ் நடித்த

M.குமரன் Son Of மகாலட்சுமி

(C/40667)

காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.)

நாதன்ஸ் சினிமா ஆஸ்பத்திரி முன்பாக குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்.

இன்று முதல் அர்ஜுன், சிம்ரன், வடிவேல், மனோரமா நடித்த

ஏழுமலை

தினசரி: 10.30. 2.30. 6.30.9.30. (பு.நே.)

மூன்றுதினங்கள் மட்டும்

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



விஜய், திரிஷா, சாயாசிங் மற்றும் பலர் நடித்த

திருப்பாச்சி

(ரீல்ஸ்)

தினசரி 11.00. 3.00. 7.00. (பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம்

சிம்பு (இருவேடம்), ஜோதிகா, கவுண்டமணி நடித்த

மன்மதன்

காட்சிநேரம்:10.30,2.30,6.30,9.30 (பு.நே.) (ரீல்ஸ்)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராமச்சந்திரன் கண்மணி

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியா, திருச்சியில் வசித்துவந்தவருமாகிய திருமதி இராமச்சந்திரன் கண்மணி அவர்கள் 03.03.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய ஏரம்பு - இராசம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களாகிய கந்தப்பு - செல்லம்மா அவர்களின் மருமகளும் இராமச்சந்திரன் (இளையாம்பி) அவர்களின் அன்பு மனைவியும் அருந்தவராசா (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும் சத்தியபாமாவின் மாமியாரும் நாகேசு, குருமூர்த்தி (இந்தியா) மற்றும காலஞ்சென்றவர்களாகிய சின்னத்தம்பி, யோகமமா, பார்வதி, மகாலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களாகிய பொன்னப்பா, நல்லதம்பி ஆகியோரின் அன்பு மைத்துனியும் செந்தீசன், லூதர்சன், தர்சன், ஞானப்பிரியா, அன்பு ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.03.2005) வெள்ளிக்கிழமை பகல் 1.00 மணியளவில் இந்தியா, திருச்சியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*47, பலாலி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (42744)

தகவல்:
ஏ.நாகேசு
(சகோதரர்).

## திருமதி நாகேஸ்வரி சுப்பிரமணியம்

அளவெட்டியைச் சேர்ந்த திருமதி நாகேஸ்வரி சுப்பிரமணியம் 02.03.2005 இல் காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பொலீஸ் அதிகாரி) அவர்களின் பாரியாரும் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி, நடராசா, செல்வம், புஷ்பவதி மற்றும் கண்ணகியம்மா, நாகேந்திரம் ஆகியோரினது சகோதரியும் கலாநிதி ஸ்ரீ சிவானி சிவநேசனின் தாயாரும் க.சிவநேசனின் மாமியாரும் ஓங்காரன், கேசவன் ஆகியோரது பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2005) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இல.27, சீனியர் லேன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*27, சீனியர் லேன்,*
*யாழ்ப்பாணம்.* (42747)

தகவல்:
சி.சுப்பிரமணியம்
(கணவர்)

## திருமதி கமலாம்பிகை அம்மாள் முத்துச்சாமிக்குருக்கள்

நல்லூர், வைமன் வீதியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில், முதலி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை அம்மாள் முத்துச்சாமிக்குருக்கள் அவர்கள் நேற்று (04.03.2005) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் பாலசுப்பிரமணியக் குருக்கள் - சாரதாம்பாள் தம்பதியினரின் அன்பு மகளும் சண்முகரட்ணசர்மா (கப்பித்தாவத்தை - கொழும்பு) காலஞ்சென்ற சுந்தரராஜக் குருக்கள், சாமிரட்ண சர்மா மற்றும் சண்முகராஜசர்மா, சோமசுந்தரசர்மா (பருத்தித்துறை), சாம்பசிவசர்மா (மோடிகோல்), காலஞ்சென்ற நடராஜக் குருக்கள், மீனாம்பிகை மற்றும் ராஜலக்சுமி ஆகியோரது அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ராஜலக்சுமி, ராஜேஸ்வரி, அம்பிகா மற்றும் திரிபுரேஸ்வரி, பாலசுப்பிரமணிய ஐயர், இராஜராஜேஸ்வரி, விசாலாட்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாலசுப்பிரமணியம் (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), வைதேகி ஆகியோரது அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2005) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் கலாநிதி அச்சக வீதி, தும்பளை, பருத்தித்துறையில் உள்ள அவரது சகோதரன் இல்லத்தில் நடைபெற்று, பருத்தித்துறை இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தும்பளை,*
*பருத்தித்துறை.*
*தொ.பே. 2264089* (42745)

தகவல்:
ச.சாம்பசிவ சர்மா
மோடிகோல்,
கொழும்பு - 13

## நாகலிங்கம் செல்லத்துரை

திக்கரை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்லத்துரை 04.03.2005 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் செல்வநாயகியின் அன்புக் கணவரும் சுந்தரம்பிள்ளை-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெயமோகன் (ஜேர்மனி), தவநதன் (ஜேர்மனி), யோகச்சித்திரா (லண்டன்), கங்காதரன் (ஜேர்மனி), தவராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அஜந்தா (ஜேர்மனி), சிவமலர் (ஜேர்மனி), நாகராஜா(லண்டன்), சுமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தாரணி(ஜேர்மனி), துவாரகன (ஜேர்மனி), ஜீவா (ஜேர்மனி), ராம் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் கணேசபிள்ளை (காரைநகர்), ஏகாம்பரம் (காரைநகர்), பரமேஸ்வரி (யாழ்பபாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தெய்வேந்திரன் (லண்டன்), பரமசாமி (கொழும்பு), சண்முகராஜா (லண்டன்), தவமணி (கொழும்பு), மங்கையர்க்கரசி (யாழ்ப்பாணம்), மனோன்மணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*55, அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.* (42750)

தகவல்:
ச.மங்கையர்க்கரசி
(மைத்துனி).

# விபத்துக்கான தடயங்கள் பொலிஸாரால் மூடிமறைப்பு

## இளம்பரிதி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச்5

நேற்று யாழ்.நகரில் இராணுவத்தினரின் டிராக்டர் மோதி சிறுமி பலியான விபத்துத் தொடர்பான தடயங்களை மூடிமறைத்து படையினரை சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கச் செய்யும் வகையில் பொலீஸார் செயற்பட்டுள்ளனர்.

நேற்றைய களேபரங்கள் தொடர்பாக இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி. அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் நெரிசல் மிக்க இப்பாதையில் இராணுவ வாகனங்களின் கட்டுப்பாடற்ற வேகத்தினாலேயே இக்கோரவிபத்து நிகழ்ந்தது என நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதேநேரத்தில் சட்டத்திற்குப் புறம்பாக ஸ்ரீலங்கா காவல்துறையினர் அதன் தடையங்களை மூடிமறைத்து சட்டத்திற்கு முரணாக செயற்பட்டதையும் கண்டு பொறுக்க முடியாத மக்களும் மாணவர்களும் நீதி கேட்டு ஜனநாயக வழியில் தங்களின் எதிர்ப்புக்களை வெளிப்படுத்திய போதும் ஸ்ரீலங்கா காவல்துறையினரும், இராணுவத்தினரும் அப்பாவி மக்கள் மீது ஆயுத முனையில் கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சுக்களையும், குண்டாந்தடி பிரயோகங்களையும், துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்டு மக்களைத் தாக்கியுள்ளனர்.

இதனால் மேலும் ஆத்திரமடைந்த மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். நிலைமையை சரியாக அணுகி மக்களை அமைதிப்படுத்த முயற்சிக்காமல் மக்கள் மீது இராணுவத்தினர் நேரடியான துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் யாழ்.பல்கலைக் கழகத்தின் முன் வீதியால் சென்றுகொண்டிருந்த வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

நகரில் சூட்டில் இருவர் காயப்படுத்தப்பட்டுள்ளார்கள். இச்சம்பவங்கள் நேரடியான யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் என்பதை போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவிற்கு சுட்டிக்காட்டியதுடன் எமது நேரடியான கண்டனங்களையும் தெரிவித்துள்ளோம்.

அத்துடன், எச்சம்பவத்திலும் தொடர்புபடாத சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்தினுள் இராணுவத்தினரும், பொலீஸாரும் புகுந்து கண்ணாடிகளை அடித்து நொறுக்கி அங்கு நின்ற மோட்டார் சைக்கிள்களையும் சேதப்படுத்தி கட்டடத்திற்கு துப்பாக்கி பிரயோகம் செய்து சேதப்படுத்தியமை மாணவர்களை அச்சுறுத்தும் ஒரு செயலாகும்.

எவரது தூண்டுதலும் பின்னணியும் இல்லாமல் இயல்பாகவே மக்கள் கிளர்ந்தெழுந்ததினால் ஏற்பட்ட இச்சம்பவங்களை புலிகளின் தூண்டுதலினால்தான் நடைபெற்றது என இராணுவத்தினர் கூறும் உண்மைக்கு புறம்பான இச் செய்தியை மறுப்பதுடன் இதற்கு எமது வன்மையான கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம்.

மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதால் மட்டும் மக்களின் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாது. மாறாக மக்களின் உணர்வுகளை மதித்து, கௌரவித்து அவர்களின் உரிமைகளை மதிக்கின்ற பொழுதே சுமுகமான நிலைமை தோன்றும் என்றும், தொடர்ந்தும் இவ்வாறான, மக்களைப் பாதிக்கின்ற- மக்கள் உயிர்களை பலியெடுக்கின்ற - சம்பவங்கள் இராணுவத்தரப்பால் இடம்பெற கண்காணிப்புக் குழுவினர் இடமளிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளோம் - என்றுள்ளது.

# விபத்தை அடுத்துக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானத்தளத்துக்கு எடுத்துச்செல்ல ஆயத்தமாகியபோது சிறுமியின் உயிர் பிரிந்தது.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் ஆறாம் வகுப்பில் கற்கும் மாணவியான நாகேந்திரம் துளஷிகா (வயது 12) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தவராவார். சம்பவம் பற்றிக் கேள்விப்பட்ட வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள், பாடசாலையை விட்டு வெளியேறி வீதியில் இறங்கித் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அதேபோன்று நகரில் உள்ள வேறு சில பாடசாலை மாணவர்களும் வீதிக்கு இறங்கித் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். மாணவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளால் பாடசாலைகள் ஸ்தம்பித்தன. சில பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டு மாணவர்கள் உடனடியாக வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

காலை வேளையில் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்ட நகரிலுள்ள ஏனைய பாடசாலை உயர்தர மாணவர்கள் கொதித்தெழுந்தனர். வீதிகளில் இறங்கி இராணுவத்தினருக்கு எதிரான தமது எதிர்ப்பைக் காட்ட ஆரம்பித்தனர்.

**விமானப் படை வாகனம் எரிக்கப்பட்டது**

யாழ்.வைத்தியசாலை வீதி - வேம்படி வீதிச் சந்தியில் வைத்து விமானப் படையினரின் வாகனம் ஒன்றை உடனடியாக வழிமறித்த மாணவர்கள், அதற்குப் பெற்றோல் ஊற்றித் தீமூட்டினர். 512 ஆவது படைப்பிரிவு அலுவலகத்தில் இருந்து கிளம்பி வந்த ஜீப் ஒன்றே எரிக்கப்பட்டது.

இதனால், அந்த இடத்தில் முறுகல் ஏற்பட்டது. பொலீஸாரும் படையினரும் குவிக்கப்பட்டனர். பதற்றம் பரவியது. கடைகள் இழுத்து மூடப்பட்டன. போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களை தரிப்பிடத்தில் கைவிட்டு அவற்றின் சாரதிகளும் நடத்துநர்களும் பாதுகாப்பான இடங்களைத் தேடிப் பதுங்கினர். பொதுமக்கள் அவசர அவசரமாக நகரை விட்டு வெளியேறினர். சில நிமிடங்களில் நகரம் வெறிச்சோடியது.

**காவலரண்கள் எரிப்பு**

இராணுவத்தினரின் காவலரண்களும் தாக்கப்பட்டு தீ மூட்டப்பட்டன. திருநெல்வேலி, பரமேஸ்வராச்சந்திக்கு அருகில் - ஆலடியில் - அமைந்திருந்த படையினரின் காவலரண்கள் பொதுமக்களால் தாக்கப்பட்டு தீயிடப்பட்டன. காவலரணில் இருந்த படையினரும் பொலீஸாரும் உடனடியாக அங்கிருந்து பின்வாங்கினர்.

அங்கிருந்து நகர்ந்த மாணவர் கூட்டம் கலட்டிச் சந்தியில் அமைந்திருந்த இராணுவக் காவலரண்களையும் அதனருகே இருந்த இராணுவ அப்பக்கடையையும் தாக்கியது.

**கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு**

இதன் பின்னர் யாழ்.நகரின் மத்தியில் கூடியிருந்த பொதுமக்களும் இராணுவத்தினருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனால் அவர்களுக்கும் படையினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இராணுவத்தினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி பொதுமக்களை விரட்டினர்.

ஆரியகுளம் சந்தியிலும் ஒரு தொகுதிப் படையினரை சுற்றிவளைத்து முற்றுகைக்குள்ளாக்கி வைத்திருந்தனர் பொதுமக்கள். திடீரென அவர்களில் சிலர் இராணுவத்தினரை நோக்கி கற்களை எறிந்தனர். இதையடுத்து இராணுவத்தினர் பொதுமக்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகளைவீசி அவர்களைக் கலைத்தனர்.

பிற்பகல் 3.00 மணியளவில் திரண்ட மாணவர் படை ஒன்று நகரிலுள்ள கொட்டடி சத்திரச் சந்தியில் உள்ள இராணுவக் காவலரணைத் தாக்கமுற்பட்டது. அச்சமயம்படையினர்அவர்களை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில் அப்பகுதியால் சென்ற இருவர் காயமடைந்தனர்.

**வீதியெங்கும் கற்கள்**

படையினருக்கு எதிரான வன்முறைகளின்போது மாணவர்களும் பொதுமக்களும் எறிந்த கற்கள் யாழ்.வைத்தியசாலை வீதி மற்றும் நகர வீதிகள் எங்கும் சிதறிக் காணப்பட்டன.

தீப்பற்றி எரிந்த இராணுவ வாகனம் மற்றும் காவலரண்களில் தீயை அணைக்க யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினருக்குப் படையினர் அழைப்பு விடுத்தனர். புறப்பட்டு வந்த தீயணைப்புப் பிரிவினரை இரண்டு தடவைகள் மாணவர்கள் இடையிலேயே மிரட்டித்திருப்பி அனுப்பினர்.

நிலைமை தொடர்ந்து பதற்றமாக காணப்பட்டதால் நகரில்இராணுவத்தினரும் பொலீஸாரும் குவிக்கப்பட்டனர். இது பதற்றத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது.

எனினும் மாலையில் பதற்ற நிலைமை மெல்ல மெல்லத் தணிந்து 4.00 மணிக்குப் பின்னர் பஸ்கள் ஓரளவு போக்குவரத்தில் ஈடுபட்டன. ஆனாலும் கடைகள் திறக்கப்படவில்லை. நகர வீதிகளில் பொதுமக்களைக் காணக்கூடியதாக இருந்தது. (கு-7-12-15-17-86-173-190)

NEW SCIENCE COLLEGE
2007 பொறியியல்
ஆரம்பம்:
சனி, ஞாயிறு
பிரிவு - 1 10-11
பிரிவு - 2 12 - 1
(42659)
By: R.குகன்

U.T.C கல்வி நிலையம்
மானிப்பாய் வீதி, உடுவில்.
A/L 2007, 2006 கலை, வர்த்தக
புதிய பிரிவு ஆரம்பம்:
05.03.2005 சனி 4.00 p.m.
Eco. -P.சண் Log. - P.கமல்
Acc. - N.சதீஸ் H.C. - S.ஜெயக்குமார்
B.stu. - பிரபல ஆசிரியர் Geo.- N.S.சங்கர்
Tam. - N. வேந்தன் Dra. - K.கந்தவேள்
★ இணுவில் திகழ் கல்வி நிலையத்தில் நடைபெற்ற 'கணக்கீடு' வகுப்புகள் யாவும் வழமையான நேர அட்டவணைப்படி இன்றிலிருந்து இங்கு நடைபெறும்.
(42674)

# கலவரத்தின் பின்னணியில் புலிகளாம் இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

இராணுவத்தினருக்கு எதிராக நேற்று யாழ். நகரில் இடம்பெற்ற கலவரங்களைப் புலிகளே பின்னணியாகநின்று நடத்தினார்கள்- தூண்டிவிட்டார்கள்.

-இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கிறார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்க.

நேற்றிரவு பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகப் பகுதியில் பலியான வயோதிபர் படையினரின் சூட்டில்தான் இறந்தார் என்பதை உறுதியாகக் கூறமுடியாது என்றும் அவர் தெரிவித்தார். முழுமையான விசாரணைக்குப் பின்னர் தான் அந்த வயோதிபரின் மரணத்துக்கானகாரணம்தெரியும்என்றார் அவர்.

இந்தச் சம்பவங்களில் படையினர் மிகவும் குறைந்த பட்சமான பலத்தையே பயன்படுத்தினர் என்றும் - படையினரின் சூடு முழங்காலுக்குக் கீழ்தான் இலக்கு வைக்கப்பட்டது - என்றும் இரா ணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் தூண்டிவிடப்பட்ட கும்பல் ஒன்றே அழிவுச் செயலில் ஈடுபட்டது. என்றார் அவர்.

இதேவேளை - இந்தக் குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் மறுத்திருக்கின்றனர். (த-12)

# பல்கலைக்கழகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன. வீதிகளில் காணப்பட்ட பொதுமக்கள் ஓடித்தப்பினர்.

யாழ்.பல்கலைக்கழகம் முன்பாகக் காணப்பட்ட மாணவர்கள் மற்றும் பொதுமக்களை நோக்கி படையினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இதன்போது மாணவர்கள் கலைந்து ஓடிப் பாதுகாப்புத் தேடினர். அவ்வேளையில் இராமநாதன் வீதி வழியே சைக்கிளில் வந்து கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் படையினரின் சூட்டுக்கு இலக்கானார். அவரது தலையில் குண்டு பாய்ந்தது. அவர் அந்த இடத்திலேயே வீழ்ந்து உயிரிழந்தார்.

உரும்பிராயைச் சேர்ந்த நாகன் கதிர்காமு (வயது 65) என்ற வயோதிபரே உயிரிழந் தார்.

அவரது சடலம் மாணவர்களால் ஓட்டோ ஒன்றில் ஏற்றப்பட்டு யாழ். ஆஸ் பத்திரிக்குக்கொண்டு செல்லப்பட்டது.

பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் கொட்டடி சத்திரத்துச் சந்திப் பகுதியிலும் நேற்றுப் பிற்பகல் படையினரோடு மோதினர். அங்குள்ள காவலரணைத் தாக்க முயன்றபோது படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். அவ்வேளை இருவர் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுபவரான குணசீலன் அன்ரனி (வயது 22) என்பவரும் சுப்பிரமணியம் சிவராசா(வயது 44) என்பவருமே காயமடைந்தனர். இவர்களில் முதலாமவருக்கு விலாப் பகுதியிலும், அடுத்தவருக்குத் தொடைப்பகுதியிலும் குண்டு தாக்கிக் காயங்கள் ஏற்பட்டன. இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிரு கின்றனர்.

(ஐ-3-7-8-12-15-17-86-173-190)

# அமைச்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

அனைத்து அமைச்சுப் பதவிகளிலும் மாற்றங்களைச் செய்வாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சரவைமாற்றத்தின் போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு மேலும் ஓர் அமைச்சை வழங்குமாறு சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதியைக் கேட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவைமாற்றத்தின் போது ஊடகத்துறை மற்றும் பௌத்த சாசன அமைச்சுப் பொறுப்புகள் புதிய முகங்களுக்கு வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(த-க-12)

# டிராக்டர் சாரதியான சிப்பாய் கைது!

யாழ்ப்பாணம், மார்ச்5

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட டிராக்டர் சாரதியான லயனல் மதுசாந்த ரணசிங்க என்ற இராணுவச் சிப்பாய் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டார்.

யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அவர் ஆஜர்செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்னால் வயோதிபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒரு பொலீஸாரும் மூன்று படையினரும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் எனவும் -

இவர்கள் தற்போது பொலீஸாரின் பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் - மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உதயனுக்குத் தெரிவித்தார். (த)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி துளசிகா நாகேந்திரன்

(யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் மாணவி)
(யா/இந்து ஆரம்பப் பாடசாலையின் பழையமாணவி)



இல.14,B.S. லேன், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையின் தரம் 7D யின் மாணவியுமான துளசிகா நாகேந்திரன் அவர்கள் நேற்று (04.03.2005) அகால மரணமடைந்தார்.

அன்னார் நாகேந்திரன் - சுந்தரி தம்பதிகளின் அன்பு மகளும், பாதுஷன், தனுஷன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அழகர்சாமி, ஐயம்மா, நாராயணசாமி, நாகம்மா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சரவணகுமார் (ஜெயந்தி), காலஞ்சென்ற சிவகுமார் (இந்திரா) ஆகியோரின் பெறாமகளும், ஐங்கரன் நாகேஸ்வரி, சுகந்தி, லோகநாயகன், அனுஷா, சசிக்குமார் ஆகியோரின் மருமகளும், ரேணுகாவின் பெறாமகளும், சுபோதினி, சுருதிகா ஆகியோரின் அன்பு அக்காவும், நவிதா, சுவாதி, மனோஷிகன், வஷ்ணவி, சஞ்சீவன், கார்த்திகாயினி, சுவேதா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்று, தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
37, பிரப்பன்குள வீதி,
யாழ்ப்பாணம்.
நா கேந்திரன் (தந்தை).
(42754)

## செல்லையா செல்வராஜா



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செல்வராஜா 03.03.05 வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (06.03.05) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செயயப்படும்.

2A, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தகவல்:
சந்திரசேகரன் (மருமகன்).
(42751)

## நாகலிங்கம் சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)



நல்லூரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுந்தரலிங்கம் அவர்கள் 2005.03.03 அன்று அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதிகளின் மகனும் பவானியின் அன்புக் கணவரும் சுனீதன், அமிழ்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கதிர்காமத்தம்பி இராஜலட்சுமி, யோகரட்ணம் சறோஜாதேவி, நாகலிங்கம், ருத்திரகுமார் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (A.F.RAYMONDS) மலர்சாலையில் இன்று சனிக்கிழமை 9.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (2005-03.06) ஞாயிற்றுக்கிழமை 9.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் இடம்பெற்று கனத்தை மயானத்திற்கு 10 மணியளவில் தகனக் கிரியைகளிற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

BS/G3/Manning Town,
Housing Scheme, Colombo - 8
Tel.No: 011 - 2689891

தகவல்:
பவானி (மனைவி),
503, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(ச-41320)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.